விலை சதம் 5

பக்கங்கள் 6

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER, AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
8 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone 3411

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு ஐப்பசி 22வ சனிக்கிழமை | Colombo, November 8 1947 | விஜய 1366 துல்ஹஜ் பிறை 24 | இதழ் 158

மணிலா மகாநாட்டுக்கு இலங்கை தூதுக்கோஷ்டி

டாக்டர் தாஸ் குப்தா பொருளாதார ஆலோசகர்

கொழும்பு, நவ 8

இலங்கை சர்வகலாசாலையின் பொருளாதாரப் பேராசிரியராக இருக்கும் டாக்டர். பி. பி. தாஸ்குப்தா, மணிலாவில் நடக்கும் ஆசியா தூரகிழக்கு நாடுகளின் பொருளாதார கமிஷன் மகாநாட்டுக்கு செல்லும் இலங்கை தூதுக்கோஷ்டியின் பொருளாதார ஆலோசகராகச் செல்லுவாரென்று அறியப்படுகிறது. இந்த தூது கோஷ்டிக்கு காரியதரிசியாக திரு. டி. ஈ. குணரத்தினவும் செல்வாரென்று அறியப்படுகிறது.

மணிலாவில் இம்மாதம் 24ம் தேதி நடக்கவிருக்கும் ஆசியா, தூர கிழக்குப் பொருளாதாரக் கமிஷன் மகாநாட்டுக்குச் செல்லும் இலங்கையின் பிரதம பிரதிநிதியாக இலங்கை எக்டபிள்யூ. அமரசூரியா நியமிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

ரூ 6174 மதிப்புள்ள சொத்து கொள்ளை

கொழும்பு, நவ 8

உருகால போலீஸ் பகுதியில் மகாலா தெற்கில் மலாவான்னே ஹேவகே டெனுச்சோ என்பவருடைய வீட்டில் அக்டோபர் 31-ம்தேதி கொள்ளைக் கோஷ்டி புகுந்து ரூ. 6174 மதிப்புள்ள பொருள்களைக் களவாடிச் சென்று விட்டதாக கூறப்படுகிறது. போலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

சேனநாயக்கா அரசாங்கத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

எதிர்க் கட்சிகள் தயாராகின்றன

சபாநாயகருடன் எதிர்க் கட்சித் தலைவர்கள் பேட்டி

கொழும்பு, நவ. 7

நேற்று எதிர்க்கட்சித்தலைவர்கள் பிரதிநிதிகள் சபை சபாநாயகர் மொலமுரேயைப் பேட்டிகண்டு நவம்பர் 25-ம் தேதி நடக்கவிருக்கும் பாராளுமன்றத் திறப்பு விழா பற்றி சம்பாஷித்தார்கள் பேட்டி கண்டவர்களின் ஜாபிதா பின்வருமாறு:- டாக்டர் என். எம் பெரேரா (லங்கா சமசமாஜக் கட்சி) பீட்டர் கெனமன் (கம்யூனிஸ்ட் கட்சி) பி எச். விலியம் டி சில்வா (போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி) ஜீ ஜீ பொன்னம்பலம் (தமிழ்க் காங்கிரஸ்) ஜீ. ஆர். மோததா (இலங்கை இந்தியன் காங்கிரஸ்) வல்லமட் பெரேரா (சுவாதீனக் கட்சி).

இப் பேச்சுவார்த்தைகளின் போது பிரதிநிதிகள் சபை முதல்வர் பண்டாரநாயகாவும் ஆர் எஸ். எஸ் குணவர்தனவும் சமுகமாயிருந்தனர்.

நவம்பர் 25-ம் தேதி காலை பாராளுமன்றத் திறப்பு விழா நடக்கும். அன்று காலை கவர்னர் இரு சபையினருக்கும் பொதுவாக ஒரு பிரசங்கம் நிகழ்த்துவார்.

பிரதிநிதிகள் சபை அன்று பின்னேரம் அல்லது அடுத்த நாட் காலை தனக்குரிய கட்டிடத்தில் கூடலாம். இங்கு அரசாங்க சார்பில் கவர்னருக்கு துதி கூறப்படும்.

இதற்கடுத்தபடியாக எதிர்க் கட்சி சார்பில் டாக்டர் என் எம் பெரேரா அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவார்.

சென்ட் சபை 12-ம் தேதி கூடி தமது தலைவரையும் உப தலைவரையும் தேர்ந்தெடுக்கும் இப்போது கிடைக்கும் தகவல்களின்படி திரு. வி. குமாரசாமி தலைவராகவும் ஸர். ஜெரார்ட் விஜயக்கூன் உப தலைவராகவும் தெரிந்தெடுக்கப்படலாம்.

நேற்று நடைபெற்ற மகாநாட்டில் இரு விஷயங்கள் சர்ச்சை செய்யப்பட்டன.

1. தெரிவுச் சபை (கமிட்டி ஒப் செலக்ஷன்)-இக் கமிட்டியே நிரந்தர சட்ட சபை பொதுக் கணக்கு சபை பொது மகஜர் சபை முதலிய சபைகளுக்கு அங்கத்தினரைத் தெரிந்தெடுக்கும் அதிகாரம் வாய்ந்தது இத்தெரிவுச் சபைக்கு பிரதிநிதிகள் சபை சபாநாயகரே தலைவராவர். இச் சபையில் எழுவர் அங்கம் வகிப்பார்கள் என்றும் அதில் நால்வர் அரசாங்கக் கட்சியில் இருந்து தெரியப்படவேண்டும் என்றும், மூவர் எதிர்க்கட்சியிலிருந்து தெரியப்படவேண்டுமென்றும் ஒத்துக்கொள்ளப்பட்டது.

2. சபைத் தலைவர் குழு- இதில் நால்வர் அங்கம் வகிப்பார்கள். உப சபைகளின் தற்காலிக தலைவர் பதவிகளுக்கு இவர்கள் சபாநாயகரால் அல்லது உப சபாநாயகரால் அல்லது அவர்கள் இல்லாத விடத்து சபைகளின் உப தலைவர்னால் தெரிந்தெடுக்கப்படுவார்கள். உப சபாநாயகர் வராத விடத்து அப்பதவிக்கு இவர்கள் தெரியப்படலாம். சபாநாயகர் மொலமுரே தெரிவுச் சபைக்கும் சபைத் தலைவர் குழுவுக்கும் அங்கத்தினரைச் சிபார்சு செய்யுமாறு கட்சித் தலைவர்களை வேண்டிக்கொண்டுள்ளார்.

அ. இ. த. காங்கிரஸ் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு வரவேற்பு

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு வரவேற்பு அளிக்கும் முகமாக யாழ்ப்பாணம் முற்ற வெளியில் இம்மாதம் 15 ம் தேதி 4-30 மணியளவில் ஒரு பொதுக் கூட்டம் திரு. ஆர். சிவகுருநாதர் தலைமையில் நடைபெறும்.

பேராசிரியர் திரும்பினார்

ஐரோப்பாவுக்கு ரஜாவில் சென்றிருந்த பேராசிரியர் ஈ. எல். வி லுடவாக்கும் அவரது மனைவியும் இலங்கை திரும்பியுள்ளனர். ஹங்கேரியில் இவர்கள் 6 மாத காலம் தங்கியிருந்தனர்.

ஸ்ரீ நடேசய்யர் மரணம்



பழைய அரசாங்க சபையில் ஹட்டன் பிரதிநிதியாக இருந்த ஸ்ரீ கோ. நடேசய்யர் நேற்று (7-11-47) காலை 7 மணியளவில் தட்டாரத் தெருவிலுள்ள தமது இல்லத்தில் காலமானார்.

திரு. நடேசய்யர் பழைய சட்ட சபையிலும் அதற்கு வருடங்களாக அங்கத்தவராயிருந்தவர் இலங்கையில் முதல் வெளிவந்த தனசரித் தமிழ்ப் பத்திரிகையாகிய 'தேசபக்தன்'' இவரால் நடத்தப்பட்டதாகும். இன்று இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களில் பலர் இவரால் பயிற்றப்பட்டவராவர். ''சுதந்திரன்'' பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்தவர்.

இவர் எழுதிய தமிழ் நூல்கள் 'அழகிய இலங்கை', 'கதிர்காமம்', 'வெற்றியுனதே', 'நீ மயங்குவதேன் முதலியனவாகும் நேற்று முன்தினம் வரைக்கும் இலங்கையில் ஒரு நூற்றாண்டு அடிமை வாழ்வு என்னும் ஆங்கில நூலை எழுதி வந்தவர்.

தோட்டத் தொழிலாளர் நலனுக்காக சென்ற 26 வருடங்களாக உழைத்தவர். நேற்று மாலை 5-30 மணிக்கு அவரது பூதவுடல் கனத்தையில் தகனஞ் செய்யப்பட்டது.

"எல்லாப் பக்கங்களிலுமிருந்து அபாயம்"

"முன்னாலோசனையுடன் காஷ்மீர் தாக்கப்பட்டது"

பிரதமர் நேரு எச்சரிக்கை

புதுடில்லி, நவ 6

இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு இன்று டில்லியில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியபோது, இந்தியாவிற்கு எல்லாப் பக்கங்களிலுமிருந்து மிக மோசமான அபாயங்கள் முன்னிட்டுள்ளன என்று கூறி 'எங்களுடைய சுதந்திரம் மிகச் சுருக்கமானதாக முடிந்துவிடக்கூடும்'' என எச்சரிக்கை செய்தார்.

தொடர்ந்து பண்டித நேரு கூறியதாவது:-

"காஷ்மீர் மீது படையெடுப்பை நடாத்துவதற்கு எத்தனையோ மாதங்களுக்கு முன்பதாகவே ஆயுதங்கள் செய்யப்படுள்ளதாகவே தெரிகிறது காஷ்மீர் எல்லைப்புறங்களிலுள்ளவர்களாலும் பாகிஸ்தானிலுள்ளவர்களாலும் தாக்கப்பட்டுள்ளது. எதிரிகளின் படைகள் நவீன ஆயுதந் தாங்கியிருந்தனர். அத்துடன் பாகிஸ்தான் இராணுவத்திலுள்ள தளபதிகளால், படை கொண்டு செலுத்தப்பட்டதாகவும் காணப்படுகிறது. எப்படியிருந்த போதிலும் நாம் எங்கள் படைகளை விமானமூலம் கொண்டு சென்று காஷ்மீரைப்பாதுகாக்க முடிந்துள்ளது ஸ்ரீநகரும் எதிரிகள் ஆக்கிரமிப்பினின்றும் பாதுகாக்கப்படுகிறது."

மேலும் பண்டிட் நேரு, ஷேக் முகம்மது அப்துல்லா அவர்களின் தேசிய மகாநாட்டிற்கு நன்றி கூறியபொழுது குறிப்பிட்டதாவது:- "பொது ஜனங்கள் தருணத்திற்கு ஏற்ற விதமாக விழித்துவிடுவார்கள் நிலைமையின் அபாயத்தை நன்கு உணர்ந்துகொண்டு மகாராஜாவின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு எதிரிகளின் கைகளுக்குசண்டைகொடாது சரணாகதி அடைவதற்கு இடங்கொடாது விட்டார்கள். அவர்கள் தங்கள் வேலைகளில் வெற்றியடைந்துவிட்டார்கள்

"காஷ்மீரைப் பாதுகாக்கும் வேலையை இந்தியா எடுத்துக் கொண்டுள்ளது. காஷ்மீரிலிருந்து கடைசிக் கொள்ளைக்காரனை அகற்றுமட்டும் இந்தியா சும்மா இருக்கமாட்டாது" என்று கூறி முடித்தார் பண்டித ஜவஹர்லால் நேரு.

காஷ்மீர் பிரதம மந்திரி ஷேக் முகம்மது அப்துல்லா இன்று ஸ்ரீ நகரில் பொது ஜனங்கள் தனி மனிதன் வரைக்கும் தற்கால எதிரிகளை எதிர்க்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

மேலும் ஜனாப் ஷேக் அப்துல்லா சொன்னதாவது:-

"பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஜனாப முகம்மது அலி ஜின்னா அவர்கள் ஜனநாயகக் கொள்கைகளை காஷ்மீர் ஆட்சி விஷயத்தில் ஏற்றுக்கொள்ள வண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன். எதிரிகளைப் பின்வாங்கும்படி அவர் செய்ய வேண்டும் ஜனாப் ஜின்னாவை இது சம்பந்தமாக நான காணவேண்டுமென்று அவர் விரும்பினால் நான் சென்று காண்த தயாராகவிருக்கின்றேன்."

பர்மா:

"வேண்டுமானால் ஆயுதபலம் உபயோகித்துப் பாருங்கள்"

சர்ச்சிலுக்கு பர்மா சவால்

பிரதமர் தக்கின் நு மீது கிராதகர் தாக்குதல்

நல்ல வேளையாக உயிர் தப்பினார்

ரங்கூன், நவ 6

நேற்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பர்மா சுதந்திர மசோதா ஏற்றுக் கொள்ளப்பட்டதை இட்டு பர்மா அரசியல் வட்டாரங்கள் தமது திருப்தியைத் தெரிவிக்கின்றன. ஆனால் அதே சமயம் மசோதாவை எதிர்த்துப் பேசிய சர்ச்சில் காலஞ் சென்ற பர்மிய பிரதமர் ஆங்சானைப்பற்றி அவதூறாகப் பேசியது அதிக ஆத்திரத்தை இங்கு உண்டு பண்ணியிருக்கிறது. இது சம்பந்தமாக பொருளாதார அயல் நாட்டு விவகார மந்திரி ஊடின் நட் "இரண்டாவது உலக யுத்தத்தின் மாபெருந் தலைவர் சர்ச்சில் தம்மை ஒரு கீழான அரசியல் வாதியின் தரத்துக்குத் தாழ்த்திக் கொண்டு விட்டதாக'' குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:- "திரு சர்ச்சில் தாம் பிறந்த வளர்ந்த இடங்களின் தகமைக் கேற்க நடக்கவில்லை. ஏனெனில் சனவான்கள் இறந்து போனவர்கள் மீது வசைமாரி பொழிவதில்லை என்பதை அவ்விடங்கள் அவருக்குக் கற்றுக் கொடுக்கா திருந்திருக்க முடியாது. சர்ச்சிலோ அவரது கோஷ்டியினரோ பர்மாவை ஆயுதபலத்தால் தம் கீழ் வைத்திருக்கலாம் என்றோ அல்லது மீண்டும் ஒரு தரம் எமது நாட்டை ஆயுத பலத்தால் கைப்பற்றி விடலாம் என்றோ எண்ணினால் தாம் மீண்டும் அதிகாரத்துக்கு எப்போதாவது வந்தால் ஒருதரம் அதனைச் செய்து பார்க்கட்டும் என்று நான் அவரை அழைக்கிறேன்."

பர்மாப் பிரதமரைக் கொல்லச் சதி

ரங்கூன், நவ 6

பர்மாப் பிரதமர் தக்கின் நு இன்று மயிரிழையால் அவரைக் கொலை செய்ய முயற்சித்த சதிகாரர்களிடம் இருந்து தப்பினார். ஒரு புனித மதயாத்திரையில் இருந்து அவர் ஆகாய விமானமார்க்கமாக மீண்டதாகவும், மிஸ்கலா தன் விமானசிலயத்தில் வைத்தே மேற்படி கொலைகாரத் தாக்குதல் நடைபெற்றதாகவும் தெரிகிறது.

உத்தியோகரீதியான அறிக்கைப் பிரகாரம் பிரதமரது காரில் குண்டுகள் படவில்லை என்றும், ஒரு பிரிட்டிஷ் உதவியோகஸதர் காயப்பட்டதோடு இன்னொருவர் இறந்ததாகவும் கூறப்பட்டது. துப்பாக்கி சகிதம் தாக்குதலை நடத்திய சதிகாரர்கள் விதியோரம் இருந்து காட்டுள் ஓடி மறைந்து விட்டார்கள்.

தக்கின் நு கீழ் பர்மாவில் உள்ள பௌத்த க்ஷேத்திரத்திற்கு ஒருவார விரதம் அனுஷ்டிக்கச் சென்று மீண்டு கொண்டிருந்த போதே இத்தாக்குதல் நடைபெற்றது.

ரங்கூனில் கடந்த ஜூலை மாதம் மாஜி பிரதமர் ஆங் சானும் வேறு அறுவரும் கொலை செய்யப்பட்டதின் பின் பே தக்கின் நு பிரதமர் பதவியை ஏற்றார். பர்மா சுதந்திரம் சம்பந்தமான ஒப்பந்தத்தில் கை எழுத்திட்டுவிட்டு அவர் கடந்த அகடோபர் 25 லேயே லண்டனில் இருந்து மீண்டார்.

ஆங்சான் படுகொலைப்போது தக்கின் நுவே அரசியல் நிர்ணய சபைத் தலைவராக இருந்தார். இப்படுகொலை சம்பந்தமாக ஊசாவும் வேறு அறுவரும் இப்போது கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர் அவர்கள் மீது ஆங்சான் படுகொலைப் போது தக்கின் நு வையும் கொலை செய்ய முயன்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அரக்கானில் கலகம்

பர்மாவின் மேற்கரையில் உள்ள அரக்கானில் கலகங்கள் நிகழ்ந்து வருகின்றன இவற்றை முறியடிக்க வழி காண்பதன நோக்கமாக பர்மா மந்திரி சபையின் மூன்று அங்கத்தினர் அப்பகுதிக்கு இவ்வார முடிவில் விமானமூலம் விஜயம் செய்வார்கள் என்று தெரிகிறது.

பர்மா சுதந்திர மசோதா

பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில் பர்மா சுதந்திர மசோதா எவ்வித தடையும் இன்றி நிறைவேற்றிவைக்கப்படும் என்று தெரிகிறது.

இம்மசோதாவின் முடிவான கட்டம் நவம்பர் 14-ம் தேதியாகும். அன்று இது காமன்ஸில் கடைசி முறையாக நிறைவேற்றப்படும் என்று அறியப்படுகிறது.

பர்மாவின் அமெரிக்க ஸ்தானிகர்

பர்மாவின் முதலாவது அமெரிக்க ஸ்தானிகர் தமது பதவியை ஏற்பதற்கு விமானமூலம் அமெரிக்கா புறப்பட்டு விட்டார். அவர் லண்டனூடாகச் செல்வாரெனத் தெரிகிறது.

[ராய்ட்டர்]

இந்தியா உடனே குடியரசாகவேண்டும்

சென்னையில் டாக்டர் பட்டாபி பேச்சு

சென்னை, நவ 7

சென்னையில் நடைபெற்ற ஹோம்ரூல் இயக்க வருடாந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினர் டாக்டர் பட்டாபி சீத்தாராமய்யா பேசுகையில் கூறியதாவது:-

மவுண்ட்பேட்டன் பிரபுவை அனுப்பிவிட்டு இந்தியாவை ஒரு குடியரசாக பிரகடனம் செய்யவேண்டும். இதுவே முதலில் நாம் செய்யவேண்டியது. நான் மவுண்ட் பேட்டன் பிரபுவுக்கு எதிராக எதுவும் கூறவில்லை. ஆனால் இங்கு பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கையையும் நடைமுறையையும்தான் குறிப்பிடுகிறேன். கடந்த மூன்று மாத கால அனுபவத்தைக் கொண்டும் நாம் பிரிட்டனின் பிரதிநிதியொருவரை இந்திய அரசாங்கத்தின் தலைவராக வைத்திருப்பது ஏற்றதல்ல. (ராய்ட்டர்)

சிறுமி மீது கொதிநீரை ஊற்றினார்

எதிரிக்கு ரூ. 100 அபராதம்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி எஸ். பி நாகலிங்கம் என்பவர் அவரது வீட்டில் பணிப் பெண்ணாக இருந்த 9 வயதுச் சிறுமி ஜோகம்மா மீது கொதி நீரை ஊற்றியதாக யாழ்ப்பாணம் போலிஸ் இலாகாவைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஏ. டி. ரொட்ரிகோவினால் குற்றஞ்சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கில் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் எதிரிக்கு ரூ. 100 அபராதமும் கோர்ட் கலையுமவரை சிறைத் தண்டனையும் விதித்தார். அபராதம் செலுத்தப்படின் அப்பணம் முழுமையும் அச் சிறுமிக்குக் கொடுக்கப்படவேண்டுமென்றும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

உங்கள் இடங்களில் | மங்கள சூரியன்

மெய்கண்டான்
REGD: 7475
திருக்குறட் கலண்டர்

புதிய கிளேஸ் கடுதாசியில் அச்சிடப்பெற்றது
கல்லார்க்கும்நல்லார்க்கும் கல்லூரிவல்லார்க்கும் எல்லார்க்கும் ஏற்கும் இது!
1948-ம் வருடத்து மங்களகரமான
மெய்கண்டான்
திருக்குறட் கலண்டர்
உங்கள் இடங்களில் மங்களகரமாக விளங்கத்தக்கது
10X15 அழகிய படத்துடன் விலை ரூ. 1-75
9X7 படத்துடன் முதுமொழிக்கலண்டர் 0-85
No. 1 டயறி ரூ. 1-50, No. 2 டயறி சதம் 0-85
பிந்தினால் கிடைப்பதரிது!
மெய்கண்டான் அச்சியந்திரசாலை, மட்டுவில், சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

194 ஏ, கட்டாந் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வதிந்த ஆண்டு ஐப்பசி மீ 23உ
சனிக்கிழமை

திரு. நடேசய்யரின் மறைவு

இலங்கைக்கும் இந்தியாவுக்கு நெருங்கிய தொடர்பு நெடுநாளாக உண்டு புராண காலந் தொடங்கி இன்றளவும் அது நிலைத்திருக்கிறது. சென்ற 25 வருட காலமாக உறவை மேலும் நிலைக்கவைத்திருந்தவர் திரு. கோ. நடேசய்யர் ஆவர். இலங்கையில் எட்டு லட்சம் இந்தியர்கள் இருக்கிறார்கள். இவர்களில் எடுபடில் ஏழு பங்கினர் தோட்டத் தொழிலாளர்கள் இத்தோட்டத் தொழிலாளர்களுக்குப் போதிய படிப்பறிவில்லை. போதிய வருமானம் கிடையாது. அதுவுமல்லாமல் திரு. நடேசய்யர் இலங்கைக்கு வந்த காலத்தில், தகக காரணம் இல்லாமல் ஒரு தோட்டத் தொழிலாளி வேலைக்குப் போகாமல் இருந்தால் அது கிரிமினல் குற்றம். அதற்கு இரண்டு மாதச் சிறைத்தண்டனை கூட உண்டு தோட்டம் விட்டுத் தப்பி ஓடினால் தண்டனை. தப்பி ஓடிய தொழிலாளிக்குச் சோறுபோட்டு வீட்டில் வைத்திருந்தால் அதுவும் குற்றம் அதற்கும் தண்டனை. முதலாளிமார்கள் இந்தியத் தொழிலாளர்களை ஆடுமாடுகள் போல தூண்டு மூலம் விற்று வாங்கி, அடித்துத் தன்புறுத்தி வேலை வாங்கினார்கள். இது ஒரு நூற்றாண்டு வரையில நடந்துவந்த சம்பவமாகும். திரு. நடேசய்யர் இதை நிவிர்த்திக்கும் பணியில் ஈடுபட்டார். தோட்டத் தொழிலாளியும் மனிதன்தான் என்பதைஅவர்களுக்கு உணர்த்தினார் அவர்களிடம் அடிமைபுத்தி அகல வேண்டும் என்று பிரசாரஞ் செய்தார் அரசாங்கத்துடனும் வாதாடினார் இதன் பயனாக தோட்டத்தொழிலாளர்களுக்கு பல சலுகைகள் செய்யப்பட்டன. இத்தொழிலாளர் சார்பாக அவர் செய்துள்ள சேவையை மதிப்பிடுவது எளிதல்ல அவர்கள் இவரை "காந்தி' நடேசய்யா என்று அழைப்பார்கள். அப்பெயர் ஒன்றே இவரின் சேவையை விளக்குவதாகி விளங்கிறது.

காந்தி நடேசய்யரின் பொது ஜனசேவை அத்துடன் நின்றுவிடவில்லை அரசியலிலும் தமிழ் மக்களுக்காக உழைத்திருக்கிறார் சட்டசபை, அரசாங்க சபையாகியவற்றிலும் இருந்து கொண்டு ஆற்றியிருக்கிறார். சமீபத்தில் அரசியல் நிர்ணய சபையில் வகுக்கப்பட்ட வெளிநாட்டு அறிக்கையானது அரசாங்க சபையில் விவாதிக்கப்பட்டபோது, தமிழன் ஆண்மை உடையவன், அடிமையாக இருக்க விரும்பான் என்பதை வெளிப்படையாகக் காட்டியவர் இலங்கைக் காந்தியான தமிழ், முஸ்லிம், பிரதிநிதிகளாக வரும் தேனீர் விருந்தருந்த திரு. சேனநாயக்காவுக்கு அடிமையானார்கள். ஒரு இந்திய நியமன அங்கத்தவர் சபைக் கூட்டம் நடைபெறும்வரைக்கும் மதில் மேல் பூனையாக இருந்தார். அவ்வங்கத்தவரையும் வெள்ளையறிக்கைக்கு விரோதமாக, தம் கொள்கையை நிலைநாட்டு வண்ணம் வாக்களிப்பித்தவர் திரு. நடேசய்யரே!

இலங்கையில் முதன் முதலாக தினசரி தமிழ்ப் பத்திரிகை ஒன்றை வெளியிட்டவரும் இவரே இன்று இலங்கையிலும், இந்யாவிலும் அவரிடம் பக்தி கைத்தொழில் பயின்றவர்கள் அநேகருண்டு. இலங்கையிலுள்ள தமிழருக்கென ஒரு பத்திரிகை இல்லாததையிட்டு வருந்தி எக்கள் "சுதந்திரன்' பத்திரிகையை தமிழ்ப் பொயார்களைக் கொண்டு வெளிவரச் செய்த முக்கிய கர்த்தாவும் திரு. நடேசய்யர்தான்.

காந்தி நடேசய்யர் இலங்கை தமிழரின் ஜீவநாடியாக விளங்கியவர். அவர் இதயத்தில் தமிழ்க்குதி துள்ளிக் குதித்தாடியது. ஆண்மையும், அறிவிலும் முதிர்ந்த பெரியார். விழிப்புள்ளவர் விடாமுயற்சி மிகுந்தவர் சேவா பக்குவம் பெற்றவர் ஏழை எளியோரிடம் பரிவும், பாசமும் கொண்டவர். தோட்டத் தொழிலாளர் நலனையே கனவிலும் நினைத்து உழைத்த பெரியார். தமிழன் என்றால் ஆண்மையுடன் முன்னேறு' என்பதை இலட்சியமாகக் கொண்டவர். இத்தகைய பெரியார் நேற்று அதிகாலையில் இவ்வுலக வாழ்வை நீத்து அவ்வுலக வாழ்வை எய்சியுள்ளார். இலங்கையிலுள்ள எல்லாத் தமிழ் மக்களும் தம் ஓர் நெருக்கடியான காலத்தில் அவரை இழக்க நேரிட்டது துர்லபம். அளப்பரும் நஷ்டமுமாகும் மண்ணிற் பிறந்தவர் இறப்பது திண்ணம்; நாமென் செய்வது அவரது பிரிவாற்றால் வருந்துமனைவியாருக்கும், சுற்றமித்திரருக்கும் எமது அநுதாபம் உரித்தாகுக. அவரது ஆன்மா சாந்தியடைக.

லைசென்ஸ் இன்றி ரிவால்வர் வைத்திருந்தார்

எதிரிக்கு ரூ 250 அபராதமும் 4மாதசிறையும்

கொழும்பு நவ. 7

பமபலப்பிட்டியில் கிரிலப்பனை வீதியைச் சேர்ந்த பி. ஜோகானிஸ் சில்வா என்பவர் லைசென்ஸ் இன்றி ரிவால்வர் வைத்திருந்ததாக குற்றஞ் சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கில் கொழும்பு தெற்கு மாஜிஸ்டிரேட் திரு டி. ஜே ஆர். குணவர்த்தனா எதிரிக்கு ரூ 250 அபராதமும் நான்கு மாத சிறைத் தண்டனையும் விதித்தார்.

நீர்கொழும்பில் லொறிகள் மோதுண்டன

மூவர் கொல்லப்பட்டனர்

நீர்கொழும்பு, நவ 7

கொழும்பு தெல்லட்டெகண்யா சந்தியில் நேற்று பிற்பகல் புத்தளத்தில் இருந்து மீன் ஏற்றிக்கொண்டு கொழும்பு வந்த ஒரு லொறியும், கிம்புலாவிட்டியா ரஸ்தாவில் இருந்து சந்திக்கு வந்த வேறு ஒரு லொறியும் மோதுண்டன. இரு லொறிகளும் சேதமடைந்தன இதில் சம்பந்தப்பட்ட 12 பேர்களில் மூவர் மரணமடைந்துள்ளதாக அறியப்படுகிறது. ஒருவர் காயங்களுடன் கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டுள்ளார் மற்றவர்கள் நீர்கொழும்பு ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

பிச்சார்ட் லேன் கொலை வழக்கு

எதிரிக்கு மரண தண்டனை

கொழும்பு, நவ 7

மருதானை பிச்சார்ட் லேனில் கார் ரயில்வே ஹெட் காராக இருந்த திரு. என். சின்னையா என்பவரை கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 5-ம் திகதி அதிகாலையில் கோடாரியால் கழுத்தை வெட்டிக் கொலைசெய்ததாக சுமதிபாலா என்றும் இளைஞர்மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு அசைஸ் கோர்ட்டில் நீதிபதி திரு. நாகலிங்கம் முன் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணை முடிந்தபின் ஜூரர்கள் ஏகமனதாக குற்றவாளியென்று தெரிவித்ததன்மேல் நீதிபதி எதிரிக்கு மரண தண்டனை விதித்தார்.

கண்டிக்கு கவர்னர் புதன்கிழமை செல்வார்

கொழும்பு, நவ 7

கொழும்பிலிருந்து இம்மாதம் 12-ம் தேதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு மேல் தாவர்னரும் மூர் சீமாட்டியும் கண்டிக்கு புறப்படுவார்கள் இவர்களுடன் அந்தரங்க காரியதரிசி திரு ஈ. ஓ ஜூட்ஸ், கேடன் எல். பி. ஏ. பிளெச்சர் ஆகியவர்களும் செல்வர்.

முன்னேற்ற மனித குலம் ரஷியாவை ஆதரிக்கிறது

முதலாளித்துவ முறை அழுகிப் போய்விட்டது

சோவியத் புரட்சி விழா பற்றிய கருத்துகள்

செஞ்சதுக்கத்தில் ராணுவ அணிவகுப்பு

அணுக்குண்டு இரகஸியம் அம்பலமானதாக மொலட்டோவ் கூற்று

மாஸகோ, நவ. 7

சோவியத்புரடசியின் முப்பதாவது ஆண்டு விழா இன்று மாஸகோ செஞ்சதுக்கத்தில் மிக ஆடம்பரமாக கொண்டாடப்படும். யுத்தத்தின் பின் உலகம் கண்டறிந்திராத மிகப் பெரிய ராணுவ அணிவகுப்பும் விஞ்ஞானிகள், மணவர்கள், தொழிலாளிகள், சைதரிகள், சங்கீத விற்பன்னர்கள் 3 லட்சம பேர்களின் ஊர்வலமும் இக் கொண்டாட்டத்தின் முக்கிய அம்சமாக விளங்கும். இவ்வைபவத்தில் ஸடாலின் பிரசன்னமாயிருப்பாரா என்பது பற்றிய தகவல்கள் இதுவரை தெரியவில்லை. மந்திரி சபையின் உப தலைவரும் ராணுவ மந்திரியுமான மார்ஷல் புல்கனின் பிரசன்னமாயிருப்பாரென்று தெரிகிறது அவரால் இன்று காலை விடுக்கப்பட்ட பிரகடனத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"புதிபவோர் யுத்தத்திற்குத் தூபமிடுபவர்கள் கடந்த யுத்தத்தலைபெயர்தெறிப்பட்டபிற்போக்கு சக்திகளை ஒன்று திரட்ட முயற்சிகிறார்கள் முதலாளித்துவத்தைப் பலப்படுத்தி, புதிய யுத்தம் ஒன்றைக் கிளப்பிவிட்டு ஜனநாயகத்தைக் குழி தோண்டுவதே அவர்கள் லட்சியம்.

'ஆனால் அவர்கள் தமக்கு முன்னர் யுத்தத்தைக் கிளப்பிய ஜெர்மானிய, ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகளின் அதோகதியை நினைவில் கொள்ளவேண்டும் ஜெர்மானிய ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகள் பிறந்தக்குக் குழி தோண்டிக் கடைசியில் தாமே அக்குழிக்குள் விழுந்தொழிய நேரிட்டது

"சோவியத் ராணுவ வீரர்கள் எல்லோரும் சோவியத் அரசாங்கத்தையும் கமியூனிஸ்ட் கட்சியையும் தமது மாபெரும் தலைவர் ஸடாலினையும் ஆதரித்துத் திரண்டுநிற்கிறார்கள். அவர்களிமீது மகத்தான கடமை அமைந்துள்ளது. அக்கடமை என்னவெனில் மக்களின் மகத்தான முயற்சியால் சம்பாதிக்கப்பட்ட சமாதானத்தை பாதுகாவல் செய்தலும், சோவியத் ரஷியாவின் நலத்தைப் பேணுதலும், தாய்நாட்டின் எல்லைகளை மாற்றார் எட்டியும் பார்த்து விடாது காவல் புரிவதுமாகும்.

"இந்தக் கடமையை நிறைவேற்றக் புரிவதற்கு எமது ராணுவம் எந்த வேளையிலும் போரிடத் தயங்காத நிலையில் இருக்க வேண்டும். அத்தகைய சக்தியை வேகமாக வளர்த்து நமது சோவியத நாட்டின் ராணுவ பலத்தை நாம் முன்னணியில் கொண்டு நிறுத்த வேண்டும்.

சர்வதேச நிலைமைபற்றி மொலடடோவ்

நேற்று புரட்சி விழா சம்பந்தமாக நடைபெற்ற ஒரு விசேஷ பொதுக் கூட்டத்தில் ஸடாலினால் அனுப்பப்பட்ட ஒரு விசேஷ புரடசி தினச் செய்தி வாசிகக்கப்பட்டது இக்கூட்டத்தின் கௌரவ தலைமைப் பதவிக்கு ஸடாலின் தலைமையில் உள்ள கமியூனிஸ்ட் கட்சியின் அரசியல் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது. இச்செய்தி வெளியிடப்பட்டபோது கூட்டத்தில் மிகுந்த சந்தோஷ ஆர்ப்பரிப்பு அலை வீசியது.

இங்கு சோவியத் அயல் நாட்டு மந்திரி மொலட்டோவ் செய்த பிரசங்கத்தின் சாராம்சம் பின்வருமாறு:-

"கடந்த உலக யுத்தம் முதலாளித்துவத்தின் அஸ்திவாரத்தை கலகலக்க வைத்துவிட்டது இன்று உலகின் பாதை கமியூனிஸத்தையே நாடி நடக்கிறது ஏகாதிபத்திய வாதிகளின் காலிற் கீழ் பூகம்பம் ஆரம்பித்துவிட்டது ஜனநாயக சக்திகளோ நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பலத்திலும் பாக்கிரமத்திலும் வளர்ச்சியடைந்துகொண்டிருக்கின்றன. ஏகாதிபத்திய வெறியர்களின் புதிய ஆக்கிரமிப்புத் திட்டங்களை முறியடிப்பதுபற்றி எல்லாத் தேசங்களும் விழிப்படைய வேண்டும். ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளை ஒன்று சேர்த்து ஒரு மகத்தான சேனா சமுத்திரமாக வளர்க்க வேண்டும். அதற்குச் சமதையான சேனையை உற்பத்திசெய்ய முதலாளித்துவத்திற்குச் சக்தி போதாது

"உலகத்துத் தேசங்கள் சோவியத நாடு கடைசிவரை சமாதானத்தை நிலைநிறுத்தவே பாடுபடும் என்பதை இட்டு சந்தேகிக்கவேண்டியதில்லை. ரஷியா, அமெரிக்கா, பிரிட்டன், ஆகியவை யுத்தகாலத்தில் ஒத்துழைத்தன. இன்று ஏன் அது முடியாது? ஒத்துழைக்க விரும்பினால் இரு நாட்டு சமுதாய முறைகளும் வேறுபட்டபோதிலும் ஒத்துழைக்க முடியும் ஒத்துழைக்க விருப்பமில்லையானால் இரு நாடுகளின் சமுதாய முறைகளும் ஒன்றாயிருந்த போதிலும் கூட, ஒத்துழைக்க மாட்டா. அணு குண்டு ஓர் ஆக்கிரமிப்பு ஆயுதம் பிரிட்டனும் அமெரிக்காவும் அது சம்பந்தமான ஒரு சரியான முடிவு ஏற்படாத வண்ணம் ஐ. நா. சபையின் முயற்சிக்கு முட்டுக்கட்டை போடுகின்றன 'இன்று சர்வதேச அரசியல் இரண்டு கோஷ்டியாக பிரிந்து நிற்கின்றது. ஒன்றின் தலைமையில் அமெரிக்கா பிரிட்டன் ஆகியவை நிற்கின்றன அவை முதலாளித்துவத்தை பலப்படுத்த விரும்பும் ஜனநாயக எதிர்ப்பு சக்திகள். பிற்போக்குச் சோஷியலிஸடுகள் சிலர் அவைகளுக்கு வால்பிடிக்கின்றன

'சோவியத் ரஷ்யா இதற்கு எதிரான கொள்கையை அனுசரிக்கிறது. எல்லா நாடுகளின் சுதந்திர உரிமையையும் அங்கீகரித்து, அந்நாட்டு உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது, அமெரிக்கா ஆதரவோடு இன்று பிரிட்டன் எகிப்தின் சுதந்திரத்தை மறுக்கிறது. அமெரிக்கா விடம் இருந்து கிரீன்லாந்தை மீட்க முடியாது டென்மார்க் தத்தளிக்கிறது. அமெரிககா போக்கு உலகில் தனது ஏகாதிபத்தியதை விஸ்தரிக்கும் விபரீதப் போக்காகக் காணப்படுகிறது.

'அதனது கொள்கை அணுகுண்டு இரகஸியம் தனக்கு தெரியும் என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டது இன்று அணுக்குண்டு அறிவு அமெரிக்காவுக்குமட்டும் சொந்தமானதல்ல. உண்மையில் அணுக்குண்டுசம்பந்தமாக இன்றுஎவ்வித இரகசியமும் இல்லை என்றே சொல்லிவிடலாம் எமது நாட்டில் மேலை நாடுகள் மீது ஒரு வித பிடிமானமுடைய நம்பிக்கை குறைந்துகொண்டு வருகிறது. இது வயதுபோன பழைய தலைவர்களிடையே காணப்படுகிறது முதலாளித்துவப் பத்திரிகைகள் மேலை நாடுகளான நமது போர் வீரர்கள் வீடு திரும்பியதும் மேல்நாட்டு முறைகளை அனுசரிப்பார்கள் என்று கூறினார்கள். ஆனால் நடைபெறவில்லை முதலாளித்துவம் கலகலத்துப் போயிருக்கும் நேரத்தில் நமது உற்பத்தியுத்தத்தின் வெற்றியை உலக ஜனநாயக சக்திகளே உலக ஏகாதிபத்திய முகாமிலுள்ள சக்தியைவிட மகத்தானதாகும். சோவியத்தின் சாதனைகள் முதலாளித்வம் தனது அந்திய காலத்தைச் சமீபித்துவிட்டது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. எங்கள் முக்கிய சாதனை என்னவென்றால் சோவியத நாட்டின் தேசபக்தர்களாக எமதுமக்கள் அடைந்திருக்கும் தார்மீக மனோபாவ வளர்ச்சி ஆகும்."

பிரவடா தலையங்கம்

சோவியத் கமியூனிஸ்டுகட்சி பத்திரிகை 'பிரவடா' தனது தலையங்கத்தில் "முதலாளித்துவ முறை முற்றாய் அழுகிப்போய் விட்டது; அதனால் நீண்ட காலம் நிற்க முடியாது" என்று குறிப்பிட்டுள்ளது முதலாவது யுதத்தின் பின்னர் சோவியத் ரஷியாவை ஒழிக்க ஏகாதிபத்திய நாடுகள் போரிட்டனவல்லவா? அதுபற்றி குறிப்பிடும் "நமது நரம்புகள் இப்போது இன்னும் அதிக வலுவாயிருக்கின்றன, இன்னும் அதிக சக்திகள் எமக்குத் துணையாயிருக்கின்றன. முன்னைய மனித குலம் பூராவும் எமது பக்கமே. அடிமைப்படுத்தப்பட்ட குடியேற்ற நாடுகளிலே தேசிய இயக்கங்கள் கொழுந்து விடுகின்றன அவையெல்லாம் எமது பக்கமே. எல்லா நாடுகளிலும் ஜனநாயக சக்திகள் எமக்குத் துணை. அமெரிக்காவிலும் பிரிட்டனிலும்கூட ஜனநாயக சக்திகள் நமது பக்கமே உள்ளன" என்று அது கூறுகிறது.

அமெரிக்க அபிப்பிராயம்

வாஷிங்டன், நவ 6

மொலடோவ் அணுக்குண்டு பற்றி எவ்வித ரகசியமும் இடபோது கிடையாது என்று குறிப்பிட்டுள்ளதைப் பற்றி இங்குள்ள நிபுணர்கள் பிரவநம அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள்

"அணுக்குண்டு ரகசியத்தை அறிந்துகொள்ளுதற்கும் அதனை யுதார்தததில செய்வதற்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு, ஏனெனில அதற்கு அதிக பணம், உழைப்பு, பொருட்கள் என்பன வேண்டியிருக்கும்."

(ராய்ட்டர்)

கிழக்கு பஞ்சாபுக்கு அபாயம் வரலாம்

5 லக்ஷம் பேரை படை திரட்டவேண்டும்

சர்தார் மங்கள சிங் அறிக்கை

புதுடில்லி, நவ. 5

மத்தியஅசெம்பிளி மாஜி மெம்பரான சர்தார் மங்கள சிங் ஓர் அறிக்கையில்கூறுவதாவது:-

காஷ்மீர் சமபவங்கள் பஞ்சாபிகளுக்கு அதிகலக்கத்தை உண்டு பணணி விட்டது இந்தியாவிலோ அல்லது குறைந்தது கிழக்கு பஞ்சாபிலோ யுதககால அடிப்படையில் முஸ்தீகள் செய்ய வேண்டுவது அவசியமென்று நான் வற்புறுத்துகிறேன். பலமான தற்காப்புப் படை ஒன்று திரட்டப்பட வேண்டும். இதற்கு முதல்படியாக திடகாத்திரமுள்ள ஐந்து லக்ஷம் பஞ்சாபிகளுக்கு பயிற்சி அளித்து நவீன தளவாடங்களை சப்ளை செய்ய வேண்டும். காஷ்மீரில் நடந்ததைப்போல் கிழக்கு பாஞ்சாலத்தின் மீதும் பாகிஸ்தான துருப்புகள் படையெடுக்கக் கூடும் சாதாரண உடை தரித்துக் கொண்டு உள்ளே பிரவேசித்து விடுவார்கள். ஏற்கனவேயே பாகிஸதானிகள் கிழக்கு பாஞ்சால எல்லை கிராமங்கள் மீதும் பலதடவை தாக்குதல்கள் நடத்தியுள்ளனர்

பாதுகாப்பு படை திரட்டுவதற்குகாலதாமதம் செய்தாலே புறக்கணித்தாலோ நமக்கே கூபதது.

"தமிழ்ப் பண்டிதர்கள் துக்க தினம்'

சென்னை மாகாணமெங்கும் நடத்த வேண்டுகோள்

சென்னை, நவ. 5

தமிழ் ஆசிரியர்கள் ஊதிய நிலையை உயர்த்த சர்க்கார் இதுவரை ஒன்றும் செய்யாததைக் கண்டு வருந்தி சென்னை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் கூட்டமொன்று 2-ம் தேதியன்று டி. டி. வி. எகூலில் மயிலை புலவர் சிவமுத்து தலைமையில் கூடியது. 10-11-47 முதல 16-11-47வரை தமிழ் சிரியர்கள் "துக்கவாரம்" கொண்டாட வேண்டுமென்றும் கூட்டங்கள் நடத்தி தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக சென்னை தமிழ சிரியர் சங்க செயலாளர் கள விடுத்துள்ள அறிக்கையொன்றில் தமிழ் பண்டிதர்களின் குறைகளைச் சர்க்கார் சரிவரக் கவனிக்கவில்லையென்று கூறுகின்றனர்

சமீபத்தில் சாக்கார் வெளியிட்டுள்ள அறிக்கையை குறிப்பிட்டுவிடு அவ்வறிக்கையின படி குறிப்பிட்ட நிலையில் உள்ள ஒரு சில தமிழ சிரியர்களுக்கு மட்டும ரூபாய் பத்து உயர்வாக அளிக்க படுகிறது. அதன்படி பயனடையும் ஆசிரியர்கள் நூற்றுக்கு ஒரிருவராவரார். மேலும் பள்ளியை நடத்தும் தலைவர்கள் அச்சிறு ஊதிய உயர்வும் தமிழ் ஆசிரியர்களுக்கு கிடைக்காதபடி செய்து கொள்ளும் வகையில அரசாங்க உத்தரவு அமைந்துள்ளது என்று இவர்கள் அந்த அறிக்கையில் கூறுகின்றனர், மககளின் ஆதரவைததேட தமிழ் ஆசிரியர்கள் ஆவனபுரியவேண்டுமென்றும இவர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

காலி துறைமுகத்தை ஆழமாக்கும் வேலை

இவ்வாரம் வேலை ஆரம்பிக்கும்

காலி, நவ. 7

காலி துறைமுகத்தை ஆழமாக்குவதற்கு இடபொருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இங்கு துறைமுகத்தை ஆழமாக்குவதற்காக இரண்டு சிறு கோலி இயந்திரங்கள் காலி துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. அவை இவ்வாரம் வேலையை ஆரம்பிக்குமென்று கூறப்படுகிறது.

தங்காலை அர்பன் சபை

ஐந்து தொகுதிகளுக்கும் போட்டி

தங்காலை, நவ 7

தங்காலை அர்பன் சபையிலுள்ள ஐந்து தொகுதிகளின் அபேட்சகர்கள் தங்கள் நியமனப் பத்திரங்களை தாக்கல செய்துள்ளனர் ஐந்து தொகுதிகளுக்கும் போட்டிகள் இருக்கின்றன. 1-ம், 4-ம் தொகுதிகள் 29-ம் தேதி தேர்தல் நடக்கும். மற்ற மூன்று தொகுதிகளும் டிஸம்பர் 6-ம் தேதியே தேர்தல் நடத்தப்படும்.

பதின்மூன்று எதிரிகளில் நால்வர் விடுதலை

காலி, நவ 6

தங்காலை டிண்டிரிக்டிலுள்ள வால்கன் எலியா என்னுமிடத்தில் போலிஸ் சப்-இன்ஸபெக்டரி திரு வேலாயுதன் என்பவரை கடந்த 1946-ம் வருடம் நவம்பர் 7-ம் தேதி தாக்கிக் கொன்றதாகவும் சட்ட விரோதமாக கூட்டம் கூடியதாகவும் 13 பேர் மீது குற்றம் சாட்டப்பட்ட வழக்கு பிரதம நீதிபதி ஸர். ஜேன் ஹோராவர்ட் முன் விசாரணைக் கெடுக்கப்பட்டது இவ்வழகதில் சம்பந்தப்பட்ட நான்கு எதிரிகளை நீதிபதி விடுதலை செய்தார். இவ்வழக்கு விசாரணை இன்னும் சில நாட்களுக்கு தொடர்ந்து நடைபெறுமென்று தெரிகிறது.

மூன் இராந்த நிலையைத்தொட்டு விட்டது நமது 1947 அசாங்க தொழில திட்டம் 9 மாதத்திலேயே பூர்த்தியாக்கப்பட்டு இப்போது 103 வீதமாக விட்டது. சென்ற வருஷத்திலும் பார்க்க நமது தானியசாகுபடி 50 வீதம் அதிகரித்து விட்டது. நிலக்கரியோ நமது நாட்டில் யுத்தகதின் முன்னிருந்ததைவிட இன்று அதிகமாக கிடைக்கிறது. நமது நாட்டில் ஒரு சிறு துளியாக விளங்கி கமியூனிஸ்ட்கட்சி இன்றுபெற்றிருக்கும் வெற்றியை உலக கண்டுவிட்டது இன்றுள்ள ஜனநாயக ஐக்கிய சக்திகளே உலக ஏகாதிபத்திய முகாமிலுள்ள சக்தியைவிட மகத்தானதாகும். சோவியத்தின் சாதனைகள் முதலாளித்வம தனது அந்திய காலத்தைச் சமீபித்துவிட்டது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. எங்கள் முக்கிய சாதனை என்னவென்றால் சோவியத நாட்டின் தேசபக்தர்களாக எமதுமக்கள் அடைந்திருக்கும் தார்மீக மனோபாவ வளர்ச்சி ஆகும்."

பிரவடா தலையங்கம்

சோவியத் கமியூனிஸ்டுகட்சி பத்திரிகை 'பிரவடா' தனது தலையங்கத்தில் "முதலாளித்துவ முறை முற்றாய் அழுகிப்போய் விட்டது; அதனால் நீண்ட காலம் நிற்க முடியாது" என்று குறிப்பிட்டுள்ளது முதலாவது யுதத்தின் பின்னர் சோவியத் ரஷியாவை ஒழிக்க ஏகாதிபத்திய நாடுகள் போரிட்டனவல்லவா? அதுபற்றி குறிப்பிடும் "நமது நரம்புகள் இப்போது இன்னும் அதிக வலுவாயிருக்கின்றன, இன்னும் அதிக சக்திகள் எமக்குத் துணையாயிருக்கின்றன. முன்னைய மனித குலம் பூராவும் எமது பக்கமே. அடிமைப்படுத்தப்பட்ட குடியேற்ற நாடுகளிலே தேசிய இயக்கங்கள் கொழுந்து விடுகின்றன அவையெல்லாம் எமது பக்கமே. எல்லா நாடுகளிலும் ஜனநாயக சக்திகள் எமக்குத் துணை. அமெரிக்காவிலும் பிரிட்டனிலும்கூட ஜனநாயக சக்திகள் நமது பக்கமே உள்ளன" என்று அது கூறுகிறது.

அமெரிக்க அபிப்பிராயம்

வாஷிங்டன், நவ 6

மொலடோவ் அணுக்குண்டு பற்றி எவ்வித ரகசியமும் இடபோது கிடையாது என்று குறிப்பிட்டுள்ளதைப் பற்றி இங்குள்ள நிபுணர்கள் பிரவநம அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள்

"அணுக்குண்டு ரகசியத்தை அறிந்துகொள்ளுதற்கும் அதனை யுதார்தததில செய்வதற்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு, ஏனெனில அதற்கு அதிக பணம், உழைப்பு, பொருட்கள் என்பன வேண்டியிருக்கும்."

(ராய்ட்டர்)

பணம் வாங்க முயற்சித்ததாக குற்றச்சாட்டு

ரயில்வே சிப்பந்தி விடுதலை

கொழும்பு, நவ 7

மருதானை ரயில்வே நிலையத்தில் இந்திய சாமான்கள், பார்சல்கள் வைக்கும் இடத்திலுள்ள சிப்பந்தி திரு. ஆர். கே. சுப்பிரமணியம் என்பவர் இருவரிடமிருந்து முறையே ரூ 10, ரூ. 5 வாங்க முயற்சித்ததாக குற்றம் சாட்டிக் கொண்டு வரப்பட்ட வழக்கில் சரட்சியத்தை தாம் நம்ப முடியாதென்று அடிஷனல் மாஜிஸடிரேட் தெரிவித்ததுவிட்டு எதிரியை விடுதலை செய்தார். இருவரிடமிருந்தும் அவர்களுடைய பொருட்களை நேரத்துடன் எடுத்துக்கொடுத்து அவர்களிடமிருந்து மேற்கூறிய பணத்தை சந்தோஷமாக பெற்றுக் கொள்ள முயற்சித்ததாக கூறப்பட்டது.

கூட்டுறவு ஆஸ்பத்திரிக்கு மந்திரி விஜயம்

யாழ்ப்பாணம், நவ 6

யாழ்ப்பாணம் மூளாய் பகுதியில் உள்ள கூட்டுறவு ஜூபிலி பன் ஆஸ்பத்திரியை ஞாயிற்றுக்கிழமை சுகாதார மந்திரி திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவும் ஸ்ரீமதி பண்டாரநாயகாவும் பார்வையிட்டனர், இவர்கள் மூளாய் சந்தியில் இருந்து ஊர்வலமாக ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பாராளுமன்ற அங்கத்தினரும் மூளாய் ஆஸ்பத்திரி யூனியன் தலைவருமான திரு. கே. ஸ்ரீநாதரத்தினம், கிழக்கிலே கூட்டுறவு முறையில் முதன் முதலாக அமைக்கப்பட்ட ஆஸ்பத்திரி இதுவேயென்றும் மேற்கிலும் இம்முறையில் ஆஸ்பத்திரிகள் அமைக்கப்பட்டிருப்பது சந்தேகமே யென்றும் குறிப்பிட்டார்.

கடந்த 12 வருடங்களாக ஆஸ்பத்திரி அடைந்துள்ள முன்னேற்றம் பற்றி குறிப்பிட்டு விடுவருடகளில் ரூ. 102,000 செலவாகிறதென்றும், அதற்கு அரசாங்கம் ரூ 10,000 மான்யம் கொடுக்க வேண்டுமென்றும், விசேஷ கட்டிட மான்யம் ரூ 100,000 கொடுக்க வேண்டுமென்றும் அவர் தொடர்ந்து பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

மந்திரி பேசுகையில் அந்த ஆஸ்பதிரியின் வேலைகளைப் பாராட்டியதுடன் வறுமையை ஒழிப்பதற்கு கூட்டுறவு முறை ஏற்றதென்றும் கூறினார். மேலும் அவர்களது கோரிககை ஆதரவுடன் கவனிக்கப்படுமென்றும் குறிப்பிட்டார்.

காரியச் சுரங்கத்தில் மிதந்த பிரேதம்

போலிஸார் மீண்டும் புலன் விசாரணை செய்கின்றனர்

அவிசாவிளை, நவ. 7

ஆகஸட் வெள்ளப் பெருக்கின் போது காரியச் சுரங்கத்தில் ஒரு மனிதரின் பிரேதம் மிதந்தது கண்டு பிடிக்கப்பட்டிருந்தது இனங்கண்டு பிடிக்க முடியாத நிலையில் இப்பிரேதம் இருந்தாலும் அநேக காயங்கள் உடலில் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டிருந்தது. மரண விசாரணையின் பின் புதைக்கப்பட்டிருந்த இப்பிரேதம் மீண்டும் எடுக்கப்பட்டு விசாரணை நடத்தப்படுகிறது. அவிசாவிளைப் போலிஸார் மேற்கொண்டு புலன் விசாரணைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

கார் விபத்தில் வர்த்தகர் மரணம்

கொழும்பு, நவ. 7

பமனகடை என்னுமிடத்தைச் சேர்ந்த வர்த்தகரான கே. டொன் லூவிஸ சில்வா 62 வயது என்பவர் சைக்கிளில் செல்லுகையில் கலகிசையில் ஒரு காரினால் தட்டி விழ்த்தப்பட்டதால் மரணமடைந்தார் என்று கூறப்படுகிறது. விசாரணை நடத்திய அதிகாரி திரு. ஜே. என். ஸி. திருச்செல்வம் விபத்தினால் நேர்ந்த மரணமென்று தீர்ப்பளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்குக் கடிதம்

புதிய மத பாடசாலைகள்

ஐயா,

இலங்கை அரசாங்கம் 1871-ம் ஆண்டு வரையும் கிறிஸ்தவ மயமாகவே இருந்தது. கல்வித் துறையிலும் அப்படியே 1861-ம் வருடத்துக்கு முன்னதாகவே கல்விச் சட்டத்தில் "பாடசாலைகள் இருக்கும் இடங்களுடைய சுற்றுவட்டாரத்தில் அதேபோன்ற பாடசாலைகள் அமைக்கப்பட்டால் அப்பாடசாலைகளுக்கு மான்யம் வழங்கப்படமாட்டாது" என ஒரு வரத்து சேர்க்கப்பட்டிருந்தது. கிறிஸ்தவர்கள் அலாதார் உட்பட எல்லோருக்கும் கிறிஸ்தவ மத போதனை கட்டாய பாடமாக்கப்பட்டிருந்தது. 1866-ம் ஆண்டு வரையும் சர்க்கார் உதவி பெறாத சில தனிப்பட்ட பாடசாலைகள் நீங்கலாக ஏனைய பாடசாலைகள் எல்லாம் சர்க்கார் பாடசாலையாகவோ அல்லது கிறிஸ்தவ பாடசாலையாகவோதான் இருந்தன. புரோட்டஸ்டாண்டுமதபாடசாலைகளல்லாதார் பாடசாலைகளுக்கும் உதவிபுரிய அரசாங்கம் தீர்மானித்த கொள்கை வெளியிடப்பட்ட பதினைந்து வருடங்களின் பின்னர் இதே நிலை இருந்தது. புத்தர்களும் இந்துக்களும் தங்கள் சொந்தப் பாடசாலைகளை ஆரம்பித்தனர். ஆனால் அரசாங்கம் தனது கிஸ்தவ நிர்வாகத்தின் உதவியினால் பத்தர்கள் இந்துக்கள் புதிய இயக்கத்தின் ஆர்வத்தை நசுக்கி விட்டது. பௌத்த அல்லது இந்து மத பாடசாலைகள் அரசாங்க உதவிக்கு ஆரம்பித்து ஐந்து வருடங்களின் பின்னரே பதிவு செய்யப்பட்டன. சில சமயங்களில் அரசாங்க உதவிபெறும் பாடசாலையாக பதிவு செய்யப்பட பத்து வருடங்களும் பிடிக்கும். அநேக பாடசாலைகளை ஸ்தாபித்தவர்கள் அரசாங்க உதவியின்றி அவற்றை நடத்துவதற்கு போதிய வருவாய் இல்லாததனால் அவற்றை மூட வேண்டியும் ஏற்பட்டது. இத்தகைய குரூரமான பட்சபாதத்தையும் எதிர்த்து பௌத்த-இந்து மத கல்வி நிலையங்கள் பல தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளன.

திருத்தியமைக்கப்பட்ட சட்டசபையால் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆரம்பம் கல்வி இலாகாவில் நியமிக்கப்பட்ட டைரக்டர் திரு எல் மாக்ரே-இவற்றினால் கல்வி முறையிலும் நல்ல ஒரு மாற்றம் ஏற்பட்டது. புதிதாக குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு சரியெனக் காணப்படும் எல்லாப் பாடசாலைகளுக்கும் அவை ஆரம்பிக்கப்பட்ட தினம் முதல் அரசாங்க மான்யம் அளிக்கப்பட இக்காலத்தில் முடிவு செய்யப்பட்டது. இந்த நன்மையான மாற்றத்துடன் பதினைந்து வருட காலத்திற்குள் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் (மான்யத்திற்கு) அரசாங்க உதவி பெறும் பாடசாலையாக 89 பாடசாலைகளை வடக்கே பதிவு செய்துள்ளது. ஆனால 1938 ம் வருடம் முதல் இன்றுவரையும் கடந்த நூற்றாண்டில் கிறிஸ்தவ ஆதிக்கம் உச்ச நிலையிலிருந்த காலத்தில் இருந்த நிலையிலும் பார்க்க மிக மோசமாக இருக்கிறது. இடையில் திரு. எச். எஸ். பெரேரா டைரக்டராக இருந்த சிறிது காலத்துக்கு நிலமை அவ்வளவு மோசமாக இருக்கவில்லை.

கல்விச் சட்டத்தில் மத பாடசாலைகளின் வருங்கால நிலைமை திட்டமாக்கப்பட்டதென்பதை குறிக்க சில திருத்தங்கள் செய்யப்பட்டன வென்றெண்ணியிருந்தபோதிலும் புதிய பாடசாலைகளின் தலைவிதியை கல்வி டைரக்டரின் விருப்பத்தின்படி உடனே நிர்ணயிக்க தத்துவம் அளிக்கக்கூடிய ஷரத்து உலகத்த எதிர்ப்பிலிருந்தும் சேர்க்கப்பட்டுவிட்டது. ஒரு பாடசாலை மத சம்பந்தமாகவோ அல்லது கல்வி சம்பந்தமாகவோ முக்கியமென்று கருதப்பட்டு கல்வி இலாகா டைரக்டர் அப்பாடசாலை அவசியந்தானென வெளியிட்ட பின்னர்தான் அப்பாடசாலையை பதிவுசெய்ய முடியும் கல்வி டைரக்டராக இருந்த திரு. மாக்ரே தாம் உபயோகத்துக்கொள்ளக்கூடிய அதிகாரத்தை புதிய பாடசாலைகள் விஷயத்தில் சரியான வழியில் உபயோகித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. நீதி, நடுநிலைமை முதலியவற்றுக்கு மாறாக இந்த அதிகாரத்தை டைரக்டர் உபயோகிப்பதை நான் எதிர்த்திருந்தேன்.

கீழே குறிப்பிட்டுள்ள விஷயங்கள் சுலவி இலாகா மீது இந்துமத பொதுமக்கள் தங்கள் நம்பிக்கையை முற்றாக இழக்க வேண்டியதற்கு காரணமாயிருக்கின்றன

பொன்னாலை என்னுமிடத்திலே இந்துமதப் பாடசாலை இருக்குமிடத்திலிருந்து ஒரு மைல் தூரத்திற்கு அப்பால் ஒரு கிறிஸ்தவ பாடசாலைக்கு சமீபத்தில் புதிய இந்துமதப் பாடசாலையொன்றை சைவ வித்தியாவிருத்திச் சங்கம் ஸ்தாபித்தது. இந்துமத பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பின் கிறிஸ்தவ பாடசாலையில் நான்கு பிள்ளைகள்தான் கல்விகற்று வந்தும், இந்துமத பாடசாலையை கலவையைப் பொறுத்த மட்டிலே அன்றி சமயத்தைப் பொறுத்த மட்டிலோ முக்கியமானதென்று தாம் கருதவில்லையென்று கூறி அதனை பிரகடனம் செய்ய முடியாதென்று கல்வி இலாகா தெரிவித்தது." இங்கு சமய அடிப்படை என்று கல்வி இலாகா கூறியது என்ன என்பது விளங்கவில்லை. கிறிஸ்தவ மதத்தையும் இந்து மதத்தையும் ஒன்றென கல்வி இலாகா கருதியிருக்க வேண்டும் இல்லாதவிடின் சமய அடிப்படையிலாகாதல் இந்த பாடசாலை முக்கியமானதென்பதை மறுப்பதற்கு அவர்களுக்கு ஒரு காரணமும் இருக்க இடமில்லை. வருட முடிவில் கிறிஸ்தவ பாடசாலை மூடப்பட்டபோது பிரஸ்தாப இந்துமதப் பாடசாலை சமய, அரசியல் அடிப்படையில் முக்கியமானதென்று சைவ வித்தியாவிருத்திச் சங்கத்துக்கு மானமின்றி அறிவித்தது.

கோயிலாக்கண்டியில் உள்ள தனது பாடசாலையில இருந்து ஒன்றே கால் மைல் தூரத்திலுள்ளதான் வேறொரு இடத்தில் ஒரு பாடசாலையை சைவ வித்தியாவிருத்திச் சங்கம் ஸ்தாபித்தது. இந்த இரு பாடசாலைகளுக்கும் இடையில் ஒரு கிறிஸ்தவ பாடசாலை இருந்தது. இது புதிய இந்துமதப் பாடசாலையில் இருந்து கால் மைல் தூரத்தில் இருந்தது. கிறிஸ்தவ பாடசாலையிலிருந்த மூன்றில் இரண்டு பங்கு பிள்ளைகளும் இப்புதிய பாடசாலையில் கல்விகற்க சேர்ந்திருந்தும் இப்புதிய பாடசாலை சமய-கல்வி அடிப்படைகளில் அவசியமற்றதென்று கல்வி இலாகா கூறிவிட்டது. கிறிஸ்தவ பாடசாலையை மிகவும் அதிகமான விலையைக் கொடுத்து வாங்கும்படி கல்வி இலாகா கூறியது. இந்த இலாகா இது விஷயத்தில் ஒழிவு மறைவு வேலையில் ஈடுபடுகிறதென்றோ அல்லது கல்வி-மத அடிப்படையில் அவசியம் என்பதன் கருத்தை விளங்கவில்லையென்றோதான் நாங்கள் கூற வேண்டியிருக்கிறது.

கச்சாய்ப் பகுதியில் 1938-ம் ஆண்டில் நாங்கள் ஒரு பாடசாலையை ஸ்தாபிக்க விரும்புவதாக அறிவித்தல் கொடுத்தோம். எங்களது இந்துமத பாடசாலையிலிருந்து இப்பாடசாலை ஒரு மைல் தூரத்துக்கு மேற்படாமலிருந்தும் ஒரு கல்வி அதிகாரி 1938-ம் ஆண்டில் அப்பாடசாலை சமய அடிப்படையில்தானும் அவசியம் என்று கூறிவிட்டார். நாங்கள் ஆறு வருடங்கள் பொறுத்திருந்து மீண்டும் 19-4-44ல் பாடசாலையை ஸ்தாபித்தோம் கல்வி இலாகா அதிகாரி யொருவர் இப்பாடசாலை அவசியம் என்று அறிவித்த பின்னரும் கல்வி இலாகா இப்பாடசாலை தேவையில்லையென்று வற்புறுத்திக் கூறிவந்தது. அதே நேரத்தில் எட்டிலொரு ஏக்கரிலே தகுந்த கட்டிடம் இன்றி மிஷன் பாடசாலை இருந்ததால் எங்களுடைய சிறந்த கட்டிடங்களை கொண்டதும் ஒரு ஏக்கர் விஸ்தீரணம் கொண்டதுமான இடத்தை தங்களுக்கு விற்கும்படி எங்களைக் கேட்டிருந்தது. இந்த மிஷன் பாடசாலையில் அதன் குறைகளையும் பொருட்படுத்தாது கல்வி இலாகா வாங்கியிருந்தது. கல்வி இலாகாவின் நடத்தையை எவ்வாறு விளங்க வைப்பது? விருதாவாக அவர்கள் பணத்தைச் செலவு செய்யவில்லையா? அவர்கள் முன்னாங்கள் நடந்து கொண்ட முறை என்ன என்பதை ஆலோசித்தனரா?

மண் குப்பானில் எங்களது பாடசாலையின் இடமும் கட்டிடமும் பாடசாலைக்கு ஏற்றதல்ல என்று கல்வி இலாகா கூறியது. அங்குள்ள மிஷன் பாடசாலையை கல்வி இலாகாத்தகைக்கு எடுத்திருந்தது இரண்டு பாடசாலைகள் நடத்துவதற்கு அந்தக் கிராமம் மிகவும் சிறியதென நாங்கள் கருதியதால் எங்களது பாடசாலை கட்டிடத்தை இலவசமாக கல்வி இலாகாவிடம் கொடுத்தோம். மிஷன் பாடசாலை இடம், தகுந்ததல்ல என்று கூறிவிட்டு எங்களுடைய இடத்தை கல்வி இலாகா எடுத்தது. எனனவிதமான நியாயம்! பொதுமக்கள் மனதிலே நம்பிக்கையை உண்டாக்குவதே முதல் நோக்கமாக வைத்திருக்க வேண்டிய கல்வி இலாகாவின் இத்தகைய தடுமாற்றமான நிலைமைக்கு ஒரு எல்லை வேண்டும்.

கல்வி இலாகாவில் உள்ள நிலைமைகளை புதிய மந்திரி அறிந்துகொள்ள வேண்டியே இந்த விஷயங்களை தெரிவிக்கிறோம். தனது இலாகாவின் நிர்வாக அதிகாரிகள் பயமின்றியோ அல்லது பட்சபாதமின்றியோ கல்வி முன்னேற்றத்துக்கான விஷயங்களை செய்ய வேண்டுமென்பதை அவர் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இங்ஙனம்,
சு. இராசரத்தினம்,
காரியதரிசி
சைவ வித்தியாபிவிருத்திச் சங்கம்.

பொதுவுடமை தீயணைக்க கிளம்பிய யூ. என் பி. பொது மக்களிடம் தீமூட்டும் காட்சி!

புதிய வர்த்தக விவகார மசோதா

தொழிற் கமிஷனரின் நகல் சட்டங்கள்

கொழும்பு, நவ. 7

தொழில் கமிஷனரால் தயாரிக்கப்பட்ட புதிய வர்த்தக விவகார நகல் மசோதாவின் பிரதிகள் கொழும்பிலுள்ள பல வர்த்தகர்களுக்கும் மற்றுமிடங்களிலுள்ள வர்த்தகர்களுக்கும் அதில் சம்பந்தப்பட்ட பிறருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. இந்நகல் சட்டத்தினைப்பற்றி அவர்களது அபிப்பிராயங்களை அறிந்த பின் இதனை அமுலுக்குக் கொண்டுவர ஆலோசிக்கப்பட்டுள்ளது. கவர்னர் இதனை அமுலுக்குக் கொண்டுவரலாமென அறிவித்ததும் முந்திய வர்த்தக விவகார மசோதாவும் திருத்தங்களும் ரத்துச் செய்யப்படும்.

தபாற் சுந்தோர் பண மோசடி

விசாரணைக் கமிட்டி இந்தியா செல்லும்

கொழும்பு, நவ 6

கடந்த செப்ரவரி மாதம் கண்டுபிடிக்கப்பட்ட தபாற்சுந்தோர் பண மோசடி சம்பந்தமாக 9 பேர்கள் இந்தியாவில் விசாரணை செய்யப்படவேண்டியிருக்கின்றனர். இவர்களில் இலங்கை கணக்குப் பரிசோதனை இலாகாவின் மாஜி அதிகாரியும் ஒருவர் இருப்பதாக கூறப்படுகிறது. இந்த பண மோசடியில் ரூ. 250 000 சம்பந்தப் பட்டுள்ளதாக தெரிகிறது.

ஆஸ்கிரேலியாவில் இருந்து வரவேண்டிய சாட்சி ஒருவர் எதிர்பார்க்கப்படுவதால் இலங்கையில் இது சம்பந்தமான விசாரணைகள் முடிவடையவில்லை. இவ்விடத்திய விசாரணை முடிந்ததும் இக்கமிட்டியினர் (திரு வி, என். பீரிஸ், திரு டி. அமரசிங்கா, திரு வி ஏ நிக்கொலாஸ்) இந்தியா சென்று அங்கு சுமார் இரண்டு வார காலம் விசாரணை நடத்துவார்கள். இந்தப் பண மோசடி 1944-ம் ஆண்டு முதல் நடைபெற்றதாக நம்பப்படுகிறது. ஆனால் இவ்வருடம் செப்ரவரிமாதத்தில்தான் மோசடி கண்டு பிடிக்கப்பட்டது.

ஒற்றுமை, இலட்சியம், கொள்கையில் சேனநாயக்காவின் படை "இன்ஸால்வென்ட்" ஆகிறது

பண்டாரநாயக்கா பேச்சும், யூ. என். பி. குட்டிக்கரணங்களும்

கடந்த வெள்ளிக்கிழமை வெளிவந்த 'காலய' என்னும் சிங்களப் பத்திரிகை எழுதிய வற்றின் சுருக்கமான தமிழாக்கம்:

தமது சுய நலத்திற்காக சாதிட சமய-மூலபேதத்தை ஆயுதமாகக் கொண்டு பொதுமக்களிடையே சமயத்திற்கேற்றாற்போல் கிளர்ச்சியுண்டு பண்ணும் அதிகாரத்திலிருக்கிற எங்கள் யூ. என் பி தலைவர்கள், தம்போது காஷ்மீரத்தில் நிகழும் கோர சம்பவங்களைப் பார்த்தாவது நல்ல பாடத்தைப் படிக்க வேண்டியது அவசியம்.

பிரித்தாளும் சூழ்ச்சி

சுதந்திரம் பெற்ற இந்தியாவில் நடக்கும் இந்த வகுப்புக் கலகங்களுக்கு காரணம், பலதரப்பட்ட வகுப்பு மக்களை தனித்தனியாய் பிரித்து பகை மூட்டிவிட்டு தம் காரியத்தைப் பார்த்துக் கொள்ளும் பிரிட்டிஷாரின் உள்நாட்டுச் சதிகாரர்களே. இதனாலுண்டாகிற வகுப்புக் கலகங்களுக்கு லட்சக்கணக்கான மக்கள் பலியிடப்படுகிறார்கள்.

பொய்ப் பிரசாரம் வேண்டாம்

எங்கள் தேசத்தில் - எங்களுக்கு - இன்றைக்கு நாளைக்கு சுதந்திரம் கிடைத்த பின், இந்தியாவில் நிகழ்வது போன்ற கோர சம்பவங்கள் ஏற்படாதிருக்கவேண்டுமானால் எமது சில அரசியல் கட்சிகள் வகுப்புக் கலவரங்களை யுண்டாக்கி விடக்கூடிய கிளர்ச்சிகளையும் பிரசாரங்களையும் உடனே நிறுத்திவிட வேண்டியது அவசியம்.

சண்டைக்கு இழுக்கும் யூ என் பி.

மக்களின் வாழ்க்கைத் தேவைகளை பூர்த்திசெய்வதுதான் அரசியல் கட்சிகளின் முக்கிய நோக்கமும், உடனடியான வேலைத் திட்டமுமாய் இருக்க வேண்டும். எனினும் இவர்கள் இவற்றை யெல்லாம் அலட்சியம் செய்துவிட்டு சூழ்ச்சியாக எப்படியாவது பொதுமக்கள் முன்னிலையில் ஒரு பிரச்னையை எழப்பிவிட்டு இடதுசாரிகளையும் சண்டைக்கு இழுத்துவிடுவதிலேயே கண்ணாய் இருந்தார்கள். எனினும் இடதுசாரிகளும் மற்றவர்களும், இந்த யூ என். பி வகுப்புவாதிகளை ஒருவரோடொருவர் முட்டிக்கொண்டு கரணமடிக்க விட்டுவிட்டு பின்வாங்கியிருப்பது புத்திசாலித்தனம்தான்.

தீயணைக்கும் வேலை தள்ளுபடி

சில காலத்திற்கு முன் சகல சமய பீடங்களையும் பொதுவுடமைத் தீயிலிருந்து காப்பாற்ற திரு. சேனநாயக்காவை தலைவராகக் கொண்டு நிறுவப்பட்ட தீயணைக்கும் (யூ. என். பி.) படையினர் இன்று வரைக்கும் எத்தனையோ விதமான செப்படி வித்தை காட்டியிருக்கிறார்கள். இவையொன்றிற்கும் பொதுமக்கள் ஏமாற்றமடையாததைக் கண்ட யூ என். பி. தீயணைக்கும் படையினர் தீயணைக்கும் வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டு தீமூட்டும் வேலைக்கு கரணமடித்துப் பாய்ந்தார்கள்.

தீமூட்டும் வேலை

சிங்களக் கொடிபிடித்து தீமூட்டும் வேலைக்குக் கூட இந்த யூ என். பி. யினருக்கு சாதி சிங்களவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதே பரமசங்கடமாய் இருப்பதாகத் தெரிகிறது. இங்கிலையில், ஒற்றுமையிலும் லட்சியத்திலும் இன்ஸால்வென்டாகிக் கொண்டுவருகிற சேனநாயக்காவின் தீமூட்டும் படையினர் (யூ என் பி) தறபோது, இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இந்திய தொழிலாளர்கள் வருவதை தடைசெய்யும் காவல் வேலையை கொந்தராத்து எடுத்திருக்கிறார்கள். இந்த கொந்தராத்து வேலையிலும் சரியான கணக்கு காட்ட முடியாத யூ என். பி கும்பல்கள் எல்லாவற்றையுந் தூர ஒதுக்கிவிட்டு இப்பொழுது "சோஷலிஸ்ட்" வேஷம் போட்டிருப்பதாகத் தெரிகிறது. இதுவும் முடியாவிட்டால் அடுத்தபடி என்னசெய்வார்கள் என்று கண்விழித்துக் கொண்டிருக்கிறார்கள் பொதுமக்கள்!

குரங்குச் சேட்டை

தேர்தலில் படுதோல்வியடைந்த யூ என் பி. கள் மட்டுமல்ல-அவற்றி பெற்றவர்கள் தமது சண்டித்தனத்தையு கெட்டித்தனத்தையும் மற்றவர்களுக்கு காட்வதற்கு, சிங்கக் கொடி பிடித்து விளையாடுகிறார்கள் போல தெரிகிறது சிங்கக் கொடியைத்தவிர வேறு எந்தக் கொடியை உயர்த்தினாலும்'பிடுங்கி கிழித்துவிடுவேன்' என்று பயமுறுத்திய குணசிங்காவின் செய்கை, வெகுளி கொண்டு மரத்திலேறி காய் பிஞ்சுகளையும் இலைகளையும் உடைத்தெறிந்த மிருகத்தின் செயலை ஞாபகப்படுத்துகிறது.

மறந்துபோன'சிங்களபலம்

இருந்திருந்து, எப்பொழுதாவது இரண்டொருகரணமடித்து மனிதர்களுக்கு விநோதத்தை உண்டாக்குகிற அரசியல்தலைவர்களுக்கு உண்மையிலே நாம நன்றி செலுத்த வேண்டும் சமீபத்தில் யாழ்ப்பாணம் சென்ற திரு. பண்டாரநாயக்காவை தமிழ் மக்கள் கௌரவத்தோடு வரவேற்றார்கள் எனினும், திரு. பண்டாரநாயக்காவுக்கு தன் பகுதியிலே தன் கூட்டத்தாரிடையே வீரம் பேசுகிற-காட்டுகிற சிங்களப் பலத்தை முற்றாகவே மறந்து விட்டார்.

இடமறிந்த பேசு

வரவேற்புக்கு பதிலளித்த திரு பண்டாரநாயக்கா சொன்னதாவது: இலங்கையின் முன்னேற்றத்திற்கும் விடுதலைக்கும் தமிழர் சிங்களவர் சேரப் பான்மை அத்தியாவசியம் என்றார். ஆனால், சமீபத்தில் யூ. என். பி யினர் அடித்த கரணத்திற்கும் இந்தப் பேச்சிற்கும் எவ்வளவு வித்தியாசம்! இடமறிந்து பேசு, எனறால் செய்வது என்ன? சேனநாயக்கா-பண்டாரநாயக்கா கொதலாவல ஆகியோர்கள் திடீரென்றுசோசலிஸ்ட் கடசியினராகட்டும அல்லது வேறு வேஷங்கள் போடட்டும்! கரணங்களும் அடிக்கட்டும்! ஆனால் இந்த செப்படி வித்தைகளுகெல்லாம் அறிவுள்ள பொதுமக்கள் ஏமாந்து விடமாட்டார்கள் என்பதில் ஐயப்பாடே இல்லை.

ரேம நிதி வங்கி பத்திரத்தில் கள்ளக் கையெழுத்து

எதிரிக்குச் சிறை

கொழும்பு, நவ 6

கல்கிசையில் ஸ்ரீ தர்மபால வீதியைச் சேர்ந்த டபிள்யூ அல்விஸ் சில்வா என்பவர் தபாற்சுந்தோர் சேமநிதி வங்கியில் இருந்து பணம் வாபஸ் செய்யும் பத்திரமொன்றில் கள்ளக் கையெழுத்திட்டு ரூ 40 ஏமாற்றி பெறறுக் கொண்டதாக குற்றம் சாடித் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றவாளியென்று காணப்பட்டதால் கொழும்பு தெற்குமாஜிஸ்டிரேட் திரு டி. ஜே. ஆர். குணவர்தனா எதிரிக்கு இரண்டு மாதச் சிறைத்தண்டனை விதித்தார். இதே குற்றம் புரிந்ததாக இவர் மீது தொடரப்பட்டிருந்த இரண்டாவது வழக்கிலும் இவருக்கு நீதிபதி 2 மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

யாழ்ப்பாண திருச்சபை முதல் அத்தியட்சர்

சங் 'குலேந்திரனுக்கு கொழும்பில் வரவேற்பு

கொழும்பு, நவ. 7

யாழ்ப்பாண திருச்சபையின் முதல் அத்தியட்சகர் சங். எஸ். குலேந்திரன் யாழ்ப்பாணத்திலிருந்து இன்றுகாலை கொழும்பு வந்து சேர்ந்தார். கோட்டை புகையிரதநிலையத்தில் அவரை சங் கே. எஸ். ஜெயசிங்கமும் மற்றும் ஜே. டி. ஸி. எஸ். ஐ அங்கத்தவர்களும் அவருக்கு மாலை சூட்டி வரவேற்றனர்.

மட்டக்களப்பு அர்பன்சபை

நான்கு தொகுதிகளில் போட்டி யில்லை

மட்டக்களப்பு, நவ 6

மட்டக்களப்பு அர்பன் சபையின் தேர்தல் வார்டுகள் 10-க்கும் அபேட்சகர்கள் தங்கள் பெயர்களை சமர்ப்பித்து விட்டனர். தற்காலிக சர்க்கார் ஏஜண்ட் தேர்தல் அதிகாரியாக இருந்த நியமனப்பத்திரங்களைப் பெற்றார். இங்குள்ள 10 தொகுதிகளில் 1-ம், 6-ம், 8-ம், 10-ம், தொகுதிகளில் உள்ள அபேட்சகர்கள் போட்டி யின்றித் தெரியப்பட்டனர். மற்ற தொகுதிகள் நான்கிற்கும் போட்டியிருக்கிறது.

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்கு இணையற்றது

தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள்:—

ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டீ ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்

தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு

ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை

மொத்த வியாபாரிகளுக்கோர் சந்தர்ப்பம்.

ஷாப்புச் சாமான்களில் உங்களுடைய தேவைகளுக்கு இலங்கையில் இறக்குமதியாளர்களில் முன்னணி வகிக்கும் எங்களை வினவிக்கொள்ளுங்கள். கீழ்க்கண்ட பண்டங்களில் நாங்கள் முக்கியத்துவம் பெற்றவர்கள்:-

லசிஞ்சர்ஸ், சாக்லேட்ஸ், இங்கிலீஷ் பிஸ்கட் தினுசுகள், டின்பால் உணவுகள், டின் ஆகாரவகைகள், இங்கிலீஷ் மருந்துகள், டொய்லட் தயாரிப்புகள், நூல் வகைகள், சிகரெட்டுகள், இன்னும் பலவித சாமான்கள்,

கவனிப்பு:-

அயலூர் வியாபாரிகள் மாதிரிப் பட்டியல் (Pro-forma Invoices) களுக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

O. N. ASSEN MOHAMED & Co.,
3, Dam Street, COLOMBO.
Grams: "JUST" Phone: 4057

லொசிஞ்சர், டொபி, ஐசிங் சுகர்
இம்மூன்றிலும் முதல்தரமானது வேண்டுமென்றால்
குயின் (ராணி) மார்க்கே
பார்த்து வாங்குங்கள்



குயின் (ராணி) கண்பெக்ஷன் கம்பெனி
297 & 307 சீ ஸ்டிரீட் (செட்டியார் தெரு)
கொழும்பு
Phone: 4511 Telegrams:- "CONFECTION"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெளிநாடுகளுக்கு சுருட்டு அனுப்ப தீவையை எடுத்து விடுக"

சுருட்டுத் தொழிலாளர் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ 2

யாழ்ப்பாணத்திலுள்ள சுருட்டுத் தொழிலாளர்களின் கூட்டமொன்று நல்லூரிலுள்ள சங்கமண்டபத்தில் திரு. வி. சோமசுந்தரம்அவர்களின் தலைமையின் கீழ் கூடியது. கூட்டத்திற்கு வடமாகாணங்களிலுமிருந்து பிரதிநிதிகள் சமூகமளித்திருந்தனர்.

தலைவர் திரு. சோமசுந்தரம் கூறியதாவது:- "யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரசித்தமாக விளங்குவது சுருட்டுத் தொழில்தான். அத்தொழில் இன்று மிகவும் அபாயமான நிலைமையிலிருக்கிறது. இத்தொழில் வீழ்ச்சியடைந்து வருவதையிட்டு ஆயிரக்கணக்கான மக்கள் வேலையிழந்து தவிக்கின்றார்கள். இதற்குத் தகுந்த நடவடிக்கைகளை உடனே எடுக்க வேண்டும்."

பின்னர் திரு. ஏ. துரைராஜசிங்கம் பேசியதன் சாராம்சம் பின்வருமாறு:- "எந்தவிதமான முட்டுக்கட்டைகளையும் எதிர்த்துப் போராடி வெற்றிக்கு மேல் வெற்றியீட்டியவர்கள் சுருட்டுத் தொழிலாளர்கள் தான். சுருட்டுத் தொழிலாளர்கள் தங்களுக்கு நேரவிருக்கும் முட்டுக்கட்டைகளை முறியடிக்க வேண்டும். வருங்காலத்தில் தொழிலாளர்கள் பல சோதனைகளுக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. அச்சோதனை காலத்தை நாம் எதிர்த்துப் போராடுவதற்கு நாம் எவ்வித வேற்றுமையுமின்றி ஒன்றுபட வேண்டும்."

பின்னர் கீழ்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது:-

"சுருட்டுத் தொழிலாளர்களுக்குவேலையில்லாத திண்டாட்டம் ஏற்படுவதற்குக் காரணம், சுருட்டு விற்பனையின் குறைவுதான். சுருட்டின் விற்பனையைக் கூட்ட வேண்டுமேயானால வெளிநாடுகளுக்கு சுருட்டுகளை அனுப்புவதற்குள்ள அதிக தீவையை உடனே எடுக்க வேண்டுமென அரசாங்கத்தை இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது."

தப்பி யோடிய கைதி

கொழும்பு, நவ. 7

மகரை சிறைச்சாலையில்சிறை வைக்கப் பட்டிருந்த மொரட்டுவையைச் சேர்ந்த எகொட உடமணையிலுள்ளவில்லிஹரிஸன் பெரேரா என்பவர் மகரையிலே நாரிகமா என்னுமிடத்தில் கற்களை உடைக்கும்படி விடப்பட்டிருந்தார். வேறுபல கைதிகள் அங்குவேலைசெய்துகொண்டிருந்தனர். மாலை சுமார் 4-25 மணிக்குத் தான் வேலைசெய்யும் இடத்தில் அவர் இல்லையென்று கண்டுபிடிக்கப்பட்டது.

காவலில் இருந்து தப்பியோடிய வில்லிஹரிஸன் பெரேராபற்றி போலிஸ ஸடேஷனுக்குத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. இவர் ஒரு வருட சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென்று செப்டம்பர் 4-ம் தேதி கொழும்பு தெற்கு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தண்டனை விதிக்கப்பட்டவராகும்.

கத்தியால் குத்தி காயம் விளைத்தார்

எதிரிக்கு 3 மாத சிறை

மட்டக்களப்பு, நவ. 7

ஏறாவூர் பகுதியில் எஸ். வாப்புகுட்டி எனபவரை கத்தியால் குத்தி காயம விளைத்ததாக அதேயிடத்தைச் சேர்ந்த ஏ. ஏ. லெப்பை என்பவர் மீது குற்றஞ் சாட்டி கொண்டுவரப்பட்ட வழக்கில் மட்டக்களப்பு மாஜிஸ்டிரேட் திரு. பி. ஸ்ரீஸகந்தராஜா எதிரிக்கு 3 மாத சிறைத் தண்டனை விதித்தார்.

வெள்ள நிவாரண நிதி

கவர்னரின் வெள்ள நிவாரண நிதிக்கு சிங்கப்பூரிலிருந்து ரூ. 8000 கிடைத்துள்ளது.

நல்ல சம்பளம், வீடு, கல்வி தொழிலாளர்களுக்கு வேண்டும்

பொருள் உற்பத்தியை அதிகரிக்க தொழிலாளரும் முதலாளிகளும் ஒத்துழைக்கவேண்டும்

ஆசிய தொழிலாளர் மகாநாட்டில் தீர்மானம்

புதுடில்லி, நவ 7

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் ஆசிய பிரதேச மகாநாட்டு பொதுக் காரியதரிசி ஜீவ்ரென்ல் (பெல்ஜியம்) டைரக்டர் ஜெனரல்அறிக்கைபற்றி நேற்று பேசுகையில் கூறியதாவது:-

"சமூக பொருளாதார வேற்றுமைகள் இருப்பினும் ஆசிய தொழிலாளருக்கும வெளியிடங்களில் உள்ள தொழிலாளர்களுககும் இடையில தேவைகள் லட்சியங்கள் முதலியவற்றைப் பொறுத்தமட்டில் அடிபடையில ஒறறுமை யிருககவேண்டும்.

ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் இடங்களிலும உள்ள தொழிலாளர், சுதந்திரம், பாதுகாப்பு, சமானம, மற்றவர்களிடமிருந்து மரியாதை எதிர்பார்ப்பது முதலியவற்றைப் போன்ற அடிப்படையில் ஆசிய தொழிலாளருக்கும் இவை இருக்கவேண்டும்.

சுதந்திரமாக|பயமின்றி பேசவும் எண்ணவும-சுதந்திரமாக ஒரு வேலையை தெரிந்து அதனைச் செய்யவும்-சுதந்திரமாக நாம விரும்பும இடத்துக்குச் செல்லவும்-மனிதருக்கு முன்னேறுனியாது சுதந்திரமுடன் நடந்துகொள்ளவும உலகில உள்ள ஒவ்வொருவரும்-தாம் எவ்வளவு ஏழைகளாக இருப்பினும-விரும்புவர்"

தொடர்ந்து பேசுகையில் யுத்தகாலத்தைப் பற்றி கறிப்பிடுவிட்டு ஆசிய நாடுகள் மற்ற நாடுகளுடன் முன்னேற்றமடைய வேண்டியது அவசியமென்றும் இந்த ஆசிய பிரதேச தொழிலாளர் முதல் மகாநாடு இந்த முன்னேற்றத்தின் அவசியத்தை காட்டிவிட்டதென்றும் சர்வ தேச தொழிலாளர் ஸதாபனம் ஐரோப்பிய மயமாகவே இருப்பதாகவும், ஐரோப்பாவைவிட மற்றும் பிரதேசங்களின் தேவைகளுக்கேற்ப நடவடிக்கைகளை அமைத்துக்கொள்ளவேண்டுமென்பதை தாம் பாராட்டுவதாகவும், இப்பொழுது தாங்கள் எடுத்தவரும் நடவடிக்கைகள் இதன் உண்மையை விளங்க வைப்பதாகவும் அவர் கூறினர். மேலும் அவர் பேசியதாவது:-

சில வாரங்களுக்கு முன் ஜெனிவாவிலே சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் ஆதரவில் ஏற்றுமதி சம்பந்தமாக ஒரு மகாநாடு நடைபெற்றது இப்பொழுதுநடைபெறும இம்மகாநாடு முடிந்ததும் நாங்கள் உடனே ஸதானலிற்குச் சென்று அங்கு நடக்கும் மத்திய கிழக்கு அண்மை நாடுகளின் முதல் கூட்டத்துக்குச் செல்வோம். அதே நேரத்தில் பிரேஸிலில் ரயோடி ஜனேரோவிலே அமெரிக்க நாடுகளின் பிரதிநிதிகளின் சமூக பாதுகாப்பு நிர்வாகம் சம்பந்தமான மகாநாடு இந்த ஸதாபனத்தின் ஆதரவில் நடக்கிறது. பண்டித நேரு வற்புறுத்தி யிய உலக தொடர்பை அடைவதற்கு சர்வதேச தொழிலாளர் ஸதாபனம் முயற்சிக்கின்றது. உலகின் நான்கு பகுதிகளில் நான்கு முக்கிய மகாநாடுகளை இரண்டு மாத காலத்தில் இந்த ஸதாபனம் நடத்துவது இதனை தெளிவாக்குகின்றது.

தூரகிழக்கைப் பொறுத்தளவில் சர்வதேச தொழிலாளர் ஸதாபனத்தின் முயற்சிகள் ஒரு ஆரம்ப நிலையிலேயே இருக்கின்றன. இது சம்பந்தமாக கூறப்பட்ட சிபார்சுகளின்படி, உலகின் எல்லாப் பகுதிகளிலும் சர்வதேச ஸ்தாபனத்தின் வேலைகள் உண்மையின்படி இருக்க வேண்டுமென்று விரும்பின் புதிய ஸதானத்தை ஆக்கிக் கொள்வது அவளவு அவசியமானதல்ல என்பது எனது சொந்த நம்பிக்கை. புதிதாக ஒன்றை ஆக்குவதிலும பார்க்க இருப்பதைக் கொண்டு அதன் முழு பலத்தையும் நாம் உபயோகித்துக்கொள்ள வேண்டும். இந்தக் கண்டத்திலுள்ள பிரச்னைகளுடன் பரிச்சயம் வேண்டும். அதற்கு ஆசியநாடுகளின் பிரதிநிதித்துவத்தை சர்வதேச ஸ்தாபனத்தில் அதிகரிக்கச் செய்யவேண்டும். ஆசியாவில் இருந்து அதிகாரிகளை எடுப்பது பற்றிய விஷயம் முழு கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது. செய்திப் போக்குவரத்துகளை அதிகரித்தல் ஒழுங்குகள் செய்வதற்கு ஆசிய நாடுகளில் உள்ள சர்வதேச ஸதாபனத்தின் இணை காரியாலயங்களுடன் பிரதிநிதிகளை வைப்பதுடன் காரியாலயங்களைப் பலப்படுத்தவு ஆலோசிக்கப்பட்டுள்ளது. ஆசியாவிலே காலத்துக்குக் கால சர்வதேச தொழில் ஸதாபன கமிட்டிகள், கூட்டங்கள் அல்லது சர்வதேச தொழிலாளர் மகாநாடுகளைக்கூடநடத்தலாம். சைத்தொழில் தொடர்புகள் அபிவிருத்தி விஷயத்திற்கு விசேட சிரத்தையை மகாநாடு எடுத்துக்கொள்ள வேண்டும். ஆசிய விவசாய வேலைகளின் சமூகப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு சர்வதேச ஸதாபனம் கூடியளவு உதவியளிக்கும்

ஆசிய பிரதேச தொழிலாளர் மகாநாடு நேற்று, சமூக பாதுகாப்புக் கமிட்டி சமர்பித்த சமூக பாதுகாப்பு தீர்மானத்தை ஆலோசனைக்கு எடுத்துக்கொண்டது. ஆசிய பிரதேச நாடுகளில் உள்ள தொழிலாளர்களிடையே சமூக பாதுகாப்பு ஸர்வீசை ஏற்படுத்திக் கொள்வது மிக முக்கியமென்று வற்புறுத்திக் கூறப்படும் அத்தீர்மானத்தில், அத்தகைய திட்டங்களுடன் மக்களுக்கு போதிய முக்கிய உணவுப்பொருள்கள் விநியோகிக்கப்படுவதற்கு முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்றும் வாழ்க்கைச் செலவுக்குப் போதிய சம்பளம்-நல்ல வீடு-சுகாதார வசதிகள்-இலவச கட்டாயக் கல்வி முதலியவைகளும் இருக்கவேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது இந்த லட்சியங்களை அடைவதற்கு ஆசிய நாடுகளின் அரசாங்கங்கள் விரைவாக தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. சில நாடுகளில் இருக்கும் சமூக சேவை திட்டங்கள் முன்னேற்றம் பற்றி ஆலோசனை கூறுமிடத்து ஆசியாவிலுள்ள நாடுகளின் அரசாங்கங்கள் சுயாதீனம், பிரசவம், அங்கீனம், ஆடுபத்தில் உழைப்பவர் மரணமடைதல், வேலையில்லாதவர்களுக்கு நிபந்தனைகளுடன் வேலைகள் முதலியனவுக்கும் தகுந்த திட்டங்களை இவற்றுடன் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது உற்பத்தியை அதிகரிக்க தொழிலாளரும் முதலாளிகளும் முழு மனத்துடன் ஒத்துழைப்பதன் மூலம் இத்திட்டங்கள் அதிகம் வெற்றியடைய முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டது

அநுராதபுரம், நவ. 7

காலவீவா தொகுதி பாராளுமன்ற அங்கத்தவர் திரு. எஸ். எச். மகாதியுலாவா என்பவர் கப்புகுளாமா என்னுமிடத்தைச் சேர்ந்த எம். பி. சியதை என்பவருக்குச் சொந்தமான 90 புசல் நெல்லை அத்துமீறி பிரவேசித்து திருடிச் சென்றதாகவும் அதற்குடந்தையாக இரு சர்க்கார் நெல் வாங்கும் அதிகாரிகளான திருவாளர்கள் செனிவிரத்தினவும், மானம்பெரியும் இருந்ததாகவும் குற்றப்சாட்டிக் கொண்டு வரப்பட்ட வழக்கு அநுராதபுரம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணையிலிருக்கிறது. எதிரிகள் தாங்கள் குற்றவாளிகளல்லவென்று தெரிவித்ததன் மேல் நீதிபதி வழக்கு விசாரணையை 15-ம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

காஷ்மீர் காக்கப்பட்ட வரலாறு

"டான்" பத்திரிகையின் தகவல்

புதுடில்லி, நவ. 7

மலை ஜாதியினர் கொள்ளையடிப்பதிலும் குறையாடுவதிலும் அதிக கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்திய துருப்புகள் ஸ்ரீநகருக்குள் வந்திறங்கிவிட்டன இவற்றில் ஈடுபடாத மலைஜாதியினர் முன்னேறியிருப்பின் ஸ்ரீநகர் மலைஜாதியினரால்கைப்பற்றப்பட்டிருக்கும். இந்திய துருப்புகள் நேரத்துக்கு அங்கு வந்து சேர்ந்ததால் ஸ்ரீநகரை காப்பாற்ற முடிந்தது. பராமுலாவில் கர்னல் டி. அர்ராய் தலைமையில் மலைஜாதியினரை இந்தியப் படைகள் தாக்கி சின்னாபின்னப்படுத்தி விட்டதால் மலைஜாதியினரின் திட்டங்கள் குலைந்து விட்டன இப்போராட்டத்தில் கர்னல் அர்ராய் உயிர்நீத்தார். எனினும் ஸ்ரீநகர் காப்பாற்றப்பட்டு விட்டது. படையெடுப்பாளர்கள் முற்றாக ஒடுக்கப்படாலன்றி ஸ்ரீநகருக்கு நேர்ந்துள்ள ஆபத்து முற்றாக நீங்கிவிட்டதென்று கூறமுடியாது. மலைஜாதியினர் இப்பாதுகெரில்லா யுத்த முறையில் ஈடுபடிருப்பதால் ஆபத்து முற்றாக நீங்கவிடவில்லை

காஷ்மீர் யுத்த நிலைமையை நேரில பார்வையிட்ட டைம்ஸ் அப் இந்தியா பத்திரிகை நிருபர் நிலைமையை விபரமாக வெளியிடுள்ளார். "டான்" என்னும் பத்திரிகையில் பட்டான கிராமத்தை மலைஜாதியினர் மீண்டும் கைப்பற்றி விட்டனர் என்றும் ஸ்ரீநகருக்குப் பரமுலாவுக்கும் இடையிலுள்ள இந்த கேந்திர ஸதானத்தால் சுமார் 40 லட்சம் காஷ்மீர மக்களில் பெரும்பாலோர் சுதந்திர காஷ்மீர் சர்க்காரின் கீழ் இருப்பதாகவும் பண்டித நேருஜி கூறியிருப்பது போன்று பொது ஜன வாக்கெடுப்பை இரோட்டி சர்க்கார் ஆதரிப்பதாகவும் கூறப்படுகிறது.

காஷ்மீரத்திலுள்ள பிரிட்டிஷ் பிரஜைகள்பற்றி காமன்ஸில் விவாதம் நடந்தது. சாப ராஜ்ய உறவு மந்திரி பிலிநோயல் பேக்கர் அங்குள்ள பிரிட்டிஷ் பிரஜைகள் நிலையை பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். சனிக்கிழமை பிரிட்டிஷ் அதிகாரிகள் அங்குள்ள பிரிட்டிஷாரை வெளியேற்றுவதே நலமென இரண்டாம் முறை எச்சரித்துள்ளதாகவும் அவர் கூறினர். (ராய்ட்டர்)

ஆசிய மாலுமிகளின் நலன்

இந்திய மாலுமிகளுக்குச் சேர வேண்டிய 2 கோடி ரூபாய்

டில்லி மகாநாட்டில் கோரிக்கை

புதுடில்லி, நவ. 6

இன்று ஆசிய தொழில மகாநாட்டில இந்திய மாலுமிகள ஐக்கிய சங்கத்தின உப தலைவர், நன்கர் தேசாய பேசியபோது ஆசிய மாலுமிகளின நிலையை அபிவருத்தி செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியதைக குறித்து எடுத்துரைத்தார். பிரிடடிஷ கபடல்களில் வேலை செய்யும் இந்திய மாலுமிகளின் நிலைமை மோசமாக இருக்கிறதென்றும், இந்திய மாலுமிகளுக்குச் சேரவேண்டிய 2 கோடி ரூபாய் பிரிடனிலிருக்கிறதென்றும் அது அவர்களது சுபீட்சத்திற்குசெலவிடப்பட வேண்டுமென்றும தெரிவித்தார். இது சம்பந்தமான தீர்மானமொன்றும் ஜடான் தொழிலாளர் நிலையை சம்பந்தமான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

(அ-பிரஸ்)

இலங்கையில் டார் சமஸ்தான மகாராஜா

மத்திய இந்தியாவில் உள்ள டார் சமஸ்தானத்தின் மகாராஜாவும் (27 வயது) சால வேதையைச் சேர்ந்த ராஜசாகி என்பவரும் செவ்வாய்கிழமை இரவு விமானமூலம் கொழும்வந்தனர். நேற்று காலை கொழும்பிலிருந்து கண்டிக்குச் சென்றுள்ளனர். கண்டியில சிலநாட்கள் கழிந்தபின் இவர்கள் நூரளைக்குச் செல்வர்.

கொலை வழக்கில் பொய் சாட்சியம் அளித்தார்

எதிரிக்கு ஆறு மாத சிறை

கொழும்பு, நவ. 7

மாத்தறையில நடந்த ஒரு கொலை சம்பந்தமாக இருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இவ் வழக்கில் எதிரிகள் குற்றவாளிகளல்ல வென்று ஜூரர்கள் அபிப்பிராயம் தெரிவித்ததால் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வழக்கில் இப் பொய்சாட்சியமளித்த புஞ்சிஹேவகே சாலோரிஸ் என்பவர் தமது குற்றத்தை கொழும்பு அசைஸ் கோர்ட்டில் ஒப்புக்கொண்டதால் அவருக்கு நீதிபதி திரு. டயஸ் 6 மாத சிறைத் தண்டனை விதித்தார்.

தமிழ் ஆசிரியர் சங்கம்

இரத்தினபுரி, நவ 2

இரத்தினபுரி ஆசிரியர் கழகம், சென்ற நவம்பர் மாதம் முதலாம் நாள் காலைப்பொழுது இரத்தினபுரி ஸென் லூகாஸ் காலேஜ் மண்டபத்தில், தமிழ் அன்பர்களின் விருப்பிற்கிணங்க ஒரு இம்மானுவேல் அவர்களின் மாண்புறு தலைமையின்கீழ் நடைபெற்றது. ஆவ்வமயம திரு செல்லையா அவர்கள் சமூகங்களின் இன்றிமையாமை பற்றி பேசினர். பின்னர் திரு ஏ. மகாலிங்கம் அவர்கள் 'இரத்தினபுரியில் தமிழர் நிலை' என்ற பொருள்பற்றி பேசினர் பின்பு சங்கத் தலைவராக திரு சிதம்பரம் பிள்ளையவர்களும், உப தலைவர்களாக வி செல்லையா அவர்களும், எஸ். ராஜமணி அவர்களும், இணைக்காரியதரிசிகளாக ஏ. மகாலிங்கம் அவர்களும், பண்டித நடராஜா அவர்களும, தனாதிகாரிகளாக ஜே ஆர் ரத்ன ராஜா அவர்களும், பி ககதவனம் அவர்களும், சங்கப் பாதுகாவலாளராக ஏ. இம்மானுவேல் பிள்ளை அவர்களும் தெரிவுசெய்யபபட்டார்கள். சிர்வாக சபை அங்கத்தவராக திரு ப பொன்னம்பலம், எஸ் இராமனுதன், பி. சின்னத்துரை, எம். தேவசகாயம் அவர்கள். செல்விகள் ரி. தம்பிராஜா பி சரவணமுத்து ஆகியோர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பாலில் ஜலம் கலந்து விற்றார்

எதிரிக்கு ரூ 50. அபராதம்

மட்டக்களப்பு, நவ. 7

கோட்டமுனையைச் சேர்ந்த ஏ நாகமணி என்பவர் பாலில ஜலம் கலந்து விற்றதாக குற்றஞ் சாட்டி கொண்டுவரப்பட்ட வழக்கில் மட்டக்களப்பு மாஜிஸ்டிரேட் திரு. பி. ஸ்ரீ ஸ்கந்தராஜா எதிரிக்கு ரூபாய் 50 அபராதம் விதித்தார்.

தமாஷா வரி சேர்க்கும் முறையில் குறைகள்

திருத்தியமைக்க அதிகாரிகள் ஆலோசனை

கொழும்பு நவ. 7

கொழும்பு முனிஸிபல் சபை தனது எல்லைக்குள் உள்ள தியேட்டர்கள், சினிமாக்கள், கிளப்புகள் முதலிய இடங்களில் இருந்து தமாஷா வரி சேமிக்கும் முறையில் பலவிதமான குறைபாடுகள் இருப்பதால் முனிஸிபல் சபைக்குக் கிடைக்க வேண்டிய வரிப்பணம் குறைந்துவிட்டது என்று கூறப்படுகிறது இவ் வரியைச் சேர்ப்பதற்கு கொண்டுவரப்பட்டிருந்த புதிய முறை அதிக தூரம பயனளிக்கவில்லையென்று கூறப்படுகிறது. இப்பொழுது இந்தக் குறைபாடுகளை நீக்கி மேற்கொண்டு நடவடிக்கைகளை யெடுக்க முடிவு செய்துள்ளனர்.

கப்பலில் வேலை நிறுத்தம்

சௌதாம்டன் நவ 6

நியூயார்க் புறப்பட்ட 'குயீன மேரி' கப்பலில் ஒரு வேலை நிறுத்தம் ஏற்பட்டது இதனால கப்பல் புறப்படுவது தாமதமாயிற்று. உணவு தயாரிப்போரும் இவ்வேலை நிறுத்தததில் கலந்ததால் லேசான ஆகாரங்கள் சில பிரயாணிகளுக்கு சில ஊழியர்களால் தயாரிக்கபபட்டன. இதால் பிரயாணம் செய்யும் வின்ஸர் கோமகன் தம்பதிகளும் அதனையே உண்ணும்படி நேரிட்டது. தொழிலாளர் தமது கோரிக்கையை அடைந்து வெற்றியோடு வேலைக்கு மீண்டதுமகப்பல் புறப்பட்டது

(ராய்ட்டர்)

முஸ்லிம் செனட்டருக்கு காலியில் வரவேற்பு

காலி, நவ 7

செனட் சபையில் நியமிகப்பட்ட முஸ்லிம் அங்கத்தினரான ஜனாப் ஏ. ஆர். ஏ ராளிக் காலிக்குச் சென்ற விடத்தில் அங்குள்ள மல்ஹாருஸ் சல்ஹியா பாடசாலையில்அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

பொது வைபவத்தில் இளவரசியும் சாதலரும்

பிரிட்டிஷ் மந்திரி சபையின் கல்யாணப் பரிசு

லண்டன், நவ 6

லெப்டினன்ட் மவுண்ட்பேட்டனும், இளவரசி எலிஸபெத்தும் இன்று வெஸ்ட்மினிஸடரில் நடைபெற்ற பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் கடந்த இரு யுத்தத்திலும் மரித்தவர்களின் ஞாபக வைபவத்தின் போது சிலுவைகளை நாட்டினார்கள்.

இளவரசி கலியாணத்திற்கு மந்திரி சபையின் பரிசை அளிப்பதற்காக பிரதமர் அட்லி பக்கிங்ஹாம் அரண்மனைக்கு இன்று சென்றார். கிழக்கிந்தியத் தீவு மரததில் செய்யப்பட்ட சில வீட்டுத் தளவாடங்களே பரிசாக வழங்கப்பட்டன.

(ராய்ட்டர்)

ரயில்வே தொழிலாளிக்கு சிறை

மட்டக்களப்பு, நவ 7

கே. ராஜதுரையென்னும் ஒரு அங்கவீனருக்கு அடித்து காயமவிளைததகாக சவாரி அந்தோனி என்னும் ரயில்வே தொழிலாளி மீது குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மட்டக்களப்பு மாஜிஸ்டிரேட் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா ஒரு மாத சிறைத் தண்டனை விதித்தார்

பதுளைப் பிரதிநிதிக்கு வரவேற்பு

பதுளை, நவ 6

பதுளை தொகுதி பாராளுமன்ற பிரதிநிதி திரு எஸ். எம். சுபையாவுக்கு இப்பகுதியில் வரவேற்பளிக்கப்பட்டது. பல தோட்டங்களிலுள்ள வர்களும் வரவேற்பு உபசாரப் பத்திரங்களை வாசித்துவழங்கினர். தேக்கச்சேரிகளும் நடைபெற்றன. திரு சுப்பையா இவ்வரவேற்புக் கூட்டதில பேசுகையில் மக்களின் நலன்களைத் தாம் கவனிப்பதாக கூறினர்.

இளைஞன்

இளைஞர்களின் வார இதழ். திங்கட்கிழமை தோறும் வெளிவருவது

தனிப் பிரதி சதம் 10. வருடச் சந்தா ரூ. 5-00

10-ம் தேதி இதழ் முதல் அதிக பக்கங்களுடன் இளைஞன் வெளிவருவான் ஏஜெண்டுகள் இல்லாத இடங்களுக்கு ஏஜெண்டுகள் வேண்டும்

THE ELAIGNAN PUBLISHERS,
NO. 2 GRANDPASS ROAD COLOMBO

கிரவுன் தியேட்டர், மருதானை. வெற்றிகரமாக 3 வதுவாரம்

தினசரி மாலை 6-15 இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்

புத்தப் புதிய படம்! காதிற் கினிய பாடல்கள்! மனதை கவரும் ஆடல்கள்! காதல் வீரம் சோகம் இன்னும் ஒவ்வொரு வரும் விரும்பும் அத்தனை அம்சங்களும் கொண்டது

"வாமிக் அஷ்ரா" என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காணபிக்கப்படும்

சனி-ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும், பால்களிக்கும், 1-ம் வகுப்புக்கும் அரை சார்ஜ்

மதருஸில 24 வாரங்கள் வெற்றிகரமாக ஒரே தியேட்டரில் காட்சியளித்த பாங்கான காதல் திரை ஓவியம்

இன்று உங்களுக்குக் காட்சியளிக்கின்றது! இடத்துக்கு முந்துங்கள்! டெலிபோன்: நீர். 3866

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் நவம்பர் மாதம் 8-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிடடு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org